உ

பதிவிரதா பூஷணமென்னும்

# பாலநாகம்மாள் கதை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1958
MADRAS



கிடைக்குமிடம்:

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

..., வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1. [ரு 1-00.

O-, IMTC.B
N59
112167

உ

மாயா பக்கிரியை மடியச்செய்த
பாலவர்த்தி ராஜுவின் தாய்

# பாலநாகம்மாள் கதை

பாலசந்தச் சரபக்கவி
V. A. தியாகராஜ செட்டியார் இயற்றியது.



பதிப்பாளர் :
M· தேவராஜ முதலியார்.

விற்பனையாளர் :
ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

காபிரைட்]

[விலை ரூ 1-00.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

மகாகனம் பொருந்திய அச்சுக்கூடத்தலைவர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், கவியெழுதும் புலவர்களுக்கும், யானுகிய புத்தக வியாபாரம் செய்யும் M. தேவராஜ முதலியார் தெரியப்படுத்துவது யாதெனில், "தெலுங்கு பாலநாகம்மாள் கதையை" தமிழில் மொழிபெயர்த்து தெலுங்கு பாலநாகம்மாள் கதை வாசிப்பதைப்போல், ஒவ்வொரு வரிசைக்கும் "தந்தானத்தான" என்பதைத் தொகுத்து ஆங்காங்கு சமயத்திற்குத் தகுந்த வர்ணமெட்டுகளமைத்து தமிழில் இதுவரையிலிதைப்போல் வெளிவாராத புத்தகத்தை அச்சிட துணிந்தேன். இதைக் கண்ணுரும் அச்சுக்கூடத் தலைவர்களும், புத்தக வியாபாரிகளும், அச்சிடாதபடிக்கு கேட்டுக்கொள்கிறேன். அப்படிமீறி அச்சிடும் பக்ஷத்தில், (கவர்ண்மெண்டார் அச்சுசட்டத்தின் விதிப்படி) இச்சிறுபுததகத்தாலேற்படும் நஷ்டத்திற்குத் தங்களிடம் "சட்டப்படி" நஷ்டத்தை வசூலிக்கப்படுமென்பதை இதன் மூலம் தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு
M. தேவராஜ முதலியார்

## முக்கியக் கவனிப்பு

வாசகர்களே! இந்த ,, குறியுள்ளதை ஒவ்வொரு வரிசைக்கும் தந்தானத்தான என்று வாசிக்கவும். மேலும் ஆங்காங்கு சமயத்திற்கு தகுந்த வர்ணமெட்டுகள் மாற்றப்பட்டதையும் கவனித்து வாசிக்கும்படியாக விரும்புகிறேன்.

உ

வேலுமயிலுந்துணை

பதிவிரதா பூஷணமென்னும்

# பால நாகம்மாள் கதை

விநாயகர்துதி-நேரிசை வெண்பா

ஞாலம் புகழவே நற்றவத்தி லுற்பவித்த
பாலநாகம்மாடன் பாடலதைக்—கோலமுடன்
மைந்த னெடுத்தோத மாறுதலில்லமல்
தந்திமுகா நின்னருளைத் தா.

விநாயகர் துதி.

தானன தந்தின தந்தின தானனன்று தந்தானத்தான
ஆலமுண்டதிரு நீலகண்டன்மகனே ,,
காலகாலனருள் கண்டகஜமுகனே ,,
சித்திபுத்தியெனு முத்திக்கோர் வித்தகனே ,,
சத்தியுமை தந்த நித்தியபுத்திரனே ,,
வெண்ணெய்த்திருடிய கண்ணனமருகோனே ,,
ஷண்முகற்கு மூர்த்த தற்பரதயாபரனே ,,
அங்குச பாசமும் அங்கையிற்கொண்டனே ,,
துங்க சதங்கை துலங்கு மலங்கிர்தனே ,,
அப்பமும் முப்பழமும் ஒப்புடன் படைப்பேன் ,,
இப்போ தவல்கடல் தேங்காயு முடைப்பேன் ,,
பாலநாகம்மாளின் பக்ஷமுள்ள சரிதை ,,
சீலமா யோதிடச் சிறுவனுக்கே யருள்செய் ,,
வாக்குத் தவருத பாக்கியம் தாருமையா ,,
நோக்கம் வைத்தே தியாகராஜனுக்காருமையா ,,
பாரிலிதைப் பல பேரும்படித்திடவே ,,
கோரிநின்றேன் வரம் தாருமுரைத்திடவே ,,

## கலைமகள் துதி.

கல்விக் கரசியே கண்ணன் மருமகளே தந்தானத்தான
வல்லவியே சிறு மைந்தன்முன் வந்தருளே ,,
நான்முகன் தேவியே நற்றமிழ் வாணியரே ,,
வான்புகா... ...லையினி கியானியரே ,,
...ன ரத மேரும் சொர்ணப் பசுங்கிளியே ,,
தன்மைசேர்தாமரை தன்னின்சுடரொளியே ,,
உத்தமிபாலநா கம்மாள் சரித்திரத்தை ,,
மெத்த வுரைத்திட வைத்தேனென்றன் கருத்தைக் ,,
குற்றம் குறைகளைப் பற்றறும் மாதாவே ,,
நற்றமிழ் பாரினி லோங்க வரந்தரவே ,,
பிரம்மனும் நீரும் உறமாய் எதிர்வரவே ,,
கரங்கூப்பிப் போற்றினேன் கலைமகளே திருவே ,,

## கதையின் ஆரம்பம்

மேற்குவெகுதூர மேன்மைநகர்பட்டணமாம் தந்தானத்தான
கீர்த்தியுட னர சாட்சி செய்பட்டணமாம் ,,
காசிக்கு மேற்கிலே கண்காணுத் தூரத்திலே ,,
பூச்சக்ரபட்டண மென்றிடும்சீமையிலே ,,
செந்நெல்லதுஓங்கி செழித்தே விளைந்திடுமாம் ,,
மாரி பெய்திடவே மாநில மோங்கிடுமாம் ,,
மாட மாளிகையாம் கூட கோபுரங்களாம் ,,
ஆடம்பரமான அற்புத நீர்வளமாம் ,,
அந்த நகர்தன்னை ஆட்சிபுரிபவனும் ,,
விந்தையுள்ள நவ போஜமகாராஜனும் ,,
நாட்டின் ஜனங்களின் நல்லாசீர்பெற்றவனும் ,,
நாட்டிய செங்கோல் நீதி தவறுதவனும் ,,
பிரஜைகளிடத்தில் பக்ஷம் வசித்தவனும் ,,
விரதமுடன் தெய்வ பக்தி சிறந்தவனும் ,,
தான தர்மத்தில் தலைமை வகித்தவனும் ,,
ஆணவம் மாயை அறவே யொழித்தவனும் ,,
பாரில் பிரஜைகள் பகையின்றி ஆண்டுவந்தான் ,,
ஆறிலொருபாகம் பகுதிவாங்கிச் சிறந்தான் ,,

பிச்சாண்டி மன்னனின் நற்றவப் புத்திரியாம் தந்தானத்தான
லக்ஷ்மி தேவியைப் பத்தினியாய் மணந்தான் ,,
நவபோஜன் லக்ஷிமி தேவியும் நாட்டினிலே ,,
கவலையின்றி யரசாட்சி செய்கிறவேளையிலே ,,
காலமெல்லாமிவர் பாலனில்லாக் குறையால் ,,
கால காலனைக் கருதி மனங்களித்தார் ,
கோதானம் பூதானம் கன்னிகாதானம் செய்தார் ,,
வேத வேதியர்க்கு வஸ்திர தானம் செய்தார் ,,
சத்திரம் சாவடி சதாவர்த்தி செய்துவந்தார் ,,
புத்திர மோகத்தால் பெரிதும் மனநொந்தார் ,,

வசனம்:—இப்படி இவர்கள் வெகுகாலமாக எவ்வளவோ தானதர்மங்களைப் புரிந்தும், ஒரு விதத்திலும் புத்திரபாக்கியம் அடையாதகுறையினால், மனம் வருந்தி இருக்கும் சமயம், ஒரு நாளிரவு நவபோஜ மன்னனும், லக்ஷிமிதேவியும், சயனக்கிருஹத்தில் சயனித்திருக்கும் சம்யத்தில், லக்ஷிமிதேவியானவள் தன் நாட்டிற்கு வடக்குத் திசையில், சடங்கிமலையின் மீது ஒரு முனிவர் அமர்ந்திருப்பதாகவும், அம்முனிவரை வணங்கப் புத்திரபாக்கியம் பெற்று வந்ததாகவும், சொப்பனங்கண்டு அர்த்த ராத்திரியில் தன் நாதனை எழுப்பி கூறுகிறாள்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு.

அன்புள்ள என்மதனா ஆசையுள்ள நாயகரே
என்னுடைப் பொக்கிஷமே எழுந்திருங்காண் மன்னவ
காணாதசிசயமே கண்டேனையா நித்திரையில் [ரே
வீணாகா தென்கனவு வித்தகரே இத்தரையில்
என்-கனவு பலிக்குமையா கீர்த்தியுண் டுந்தனுக்கு
மனது களிக்கப்பெற்றேன் மைந்தன் வரம் நமக்குக்
கண்ட அதிசயத்தைக் கண்ணாளா கூறுகிறேன்
பெண்டான இவ்வடியாள் பிள்ளைவரம் கோரிடவே
சடங்குமலை தனக்கு சேயிழையாள் சென்றேனையா
உடந்தையாய் நாகமுனி எதிரில் தபம் சேய்தேனையா

நாகமுனி மகிழ்ந்து நல்லவரந் தந்தாரையா
ஏகமாய்ப்புத்திரரை இளங்கொடியாள்பெற்றேனையா
பெற்று வளர்ந்திடவே சொர்பனமே கண்டேனையா
மற்றதைக் காண்பதற்குள் மாதுயான் விழித்தேனே
தவம்புரிந்து பிள்ளைவரம் தானடைந்து வாரேனையா [யா
புவனமாளும் மன்னவரே புண்ணியரே வந்திடுவேன்
பிள்ளைவரம் பேறுபெற்று புறப்பட்டுவந்தேனேயானு
கள்ளமில்லா நமதுபெயர் காலமும் விளங்கிடவே [ல்
விடைதந்தனுப்புமையா வித்தகரே என் கணவா
தடை செய்யாதீர் கண்டது தாஷ்டிகரே போய்வரு
மாதுரைத்த மொழி மன்னவனும் கேட்டதுமே [வேன்
ஏதடி பெண்மயிலே ஈதுனக்குப் பைத்தியமோ
பித்த உபரியினால் பினத்தல்மிக கொண்டாயோடி
பத்தினியே உன்கனவு பலிக்குமென நினைந்தாயோடி
பிள்ளைவரமிருந்தால் பெற்றிருக்க மாட்டாயோ
வல்லமையாய் வளர்த்து உன்பெருமை பூட்டாயோ
ஆண்மலடு பெண்மலடு அன்னமே மலடானேம்
ஏனிந்தப் பிறவிதனை ஏந்திழையே நாமெடுத்தோம்
மலட்டுப் பிறவியடி ஊமந்தனற்ற பாவியடி
கலக்கம் மனதில் கொண்டு கானகம் செல்லாதடி
போனல் பிழைநேரும் பெண்மயிலே போகாதே
காண முடியாது கர்த்தனை மடமாதே
ஆண்சென்று தவம்புரிந்தால் அவகேடு ஒன்றுமில்லை
பெண்ணுள் தவம்புரிய பேருலகிற் கேட்டதில்லை
ஆகாது ஆகாது ஆரணங்கே தவம்புரியப்
போகாதே போகாதே பூவையரே நீதனியே
கடவுளருளிருந்தால் கிட்டாதோ பிள்ளைவரம்
அடஞ்செய்ய வேண்டாமே அடைவாய் நீ அந்தபுரம்

வசனம்:—என்று அரசன் மனைவிக்கு எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேளாமல் பிடிவாதம் செய்து தாதிமார் கூட்டத்துடன் தவத்திற்குச் சென்று ஜடங்கி மலையின் உச்சியில் தபம்புரியும் நாகமுனிவரைக் கண்டாள். அச்சமயத்தில் அம்மகான்.

கண்ணிரண்டுமூடி கர்த்தனை நினைத்தார் தந்தானத்தான
சன்மார்க்கமாகத் தவநிலைபூணலானார் ,,
யோக நிஷ்டைதனில் பேரிகரிவரமர்ந்தார் ,,
ஏகம்பவாணனே என்று தவம்புரிந்தார் ,,
நாகமகாமுனி [illegible] ,,
தோகைலக்ஷிமியும் தையலும் மெய்மறந்தாள் ,,
செய்யும் ஜெபதபம் எப்படி யான் கலைப்பேன் ,,
வையகத்தில் மிக வாதனையே யடைந்தேன் ,,
கலைத்தாற்வா யோகம் கல்லாய் ஜபிப்பாரோ ,,
மலைத்துவந்தயென்னை தணலாயெரிப்பாரோ ,,
பெண்ணென்றிரங்கிப்பெரிதும் மகிழ்வாரோ ,,
என்னுள்ளம் மகிழ எனக்கருள் புரிவாரோ ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

என்று மனந்துணிந்து ஏது செய்தாள் பூவையரும்
நன்றென முனியெதிரில் அமர்ந்தாளே அரிவையரும்
அரிசிதனை யலம்பி அன்பாயுலை யூற்றி
அடுப்பை எரியவைத்தாள் அம்முனிவர் தன்னெதிரே
தொடுத்து எரியுதுபார் தவமுனி மனம்பதறக்
கண்திறந்து பார்த்தாரே கண்ணிய மகாமுனியும்
பெண்பிள்ளை வைராக்கியம் பார்த்துத் திடுக்கிட்டார்
திகைத்து மகாமுனியும் தீவிரமாய் ஏதுசெய்வார்
கதித்து எழுந்திருக்கக் கன்னிகைக்கு எச்சரித்தார்
அம்மணி தாயேநீ யாரோ உரைப்பாயம்மா
இம்முறையைக் கையாள என்னகுறை நேர்ந்ததம்மா
உன்றன் குறையதனை உத்தமியே கூறுமம்மா
சிந்தனையை நானொழிப்பேன் சித்தமது தேறுமம்மா
என்றமொழி கேட்டு ஏதுசொல்வாள் லக்ஷிமியும்
பொன்னனை வாய்திறந்து புகன்றாளே உத்தமியும்
காசி நகர்க்கடுத்த கனத்ததொரு பட்டணங்காண்
பூச்சக்ர நகர்க்கதிபன் பூமாரன் நவபோஜன்
அன்னவரின் தேவி ஆரணங்காள் யானும்
மைந்தனில்லாக் குறையால் மனது கசிந்தோமையா
உன்றனை வந்தடைந்தேன் உகந்துவரம் தாருமையா

வசனம்:—மங்கையின் சொல்கேட்ட மாமுனிவர் மனதிரங்கி, அம்மணி, அக்காரியம் என்னாலாகாது. ஆனால் இதற்கொரு வழியுண்டு, அதன்படி நடந்து கொள்வதானால் ஒருவேளை பத்ரபாக்ய மனை[illegible] [illegible]க்கு வடபாரிசத்தில் ஈசான்ய மூலையில் ஒரு அடர்ந்த மாமரமுண்டு. அம்மரத்திற்கு அடியில் ஒரு நாகபுற்றுண்டு, அப்புற்றின்மீது உன்பாதம் படாமல் அம்மரத்தின்மீதேறி அதிலுள்ள கனிகளை அறுத்து, அதன் ரசத்தைப் பிழிந்து மும்மூர்த்திகளை நினைத்து, அருந்துவாயேல் உடனே கருத்தரித்துப் புத்திரபாக்கிய முண்டாகும். இதுபோல் எத்தனை கனிகளைப் புசிக்கின்றனையோ, அத்தனை புத்திரர்கள் பிறப்பார்கள் எனத் தெரிவித்தார். இம்மொழிகளைக் கேட்ட லக்ஷிமி தேவி முனிவரிடம் விடைபெற்று மாமரத்தை நோக்கிவரும் சமயத்தில், மும்மூர்த்திகளும் இம்மங்கைக்குத் துணையாக வழிப்போக்கர்களைப் போலத் தோன்றி, அம்மரம் இருக்கும் இடத்தைக் காட்டி மறைந்தனர் உடனே லக்ஷிமிதேவி அம்மரத்தருகில் வந்து நின்று,

அண்ணாந்துபார்த்தாளே அற்புதமாமரத்தை தந்தானத்தான
எண்ணிலாத கோடி இனிய மாம்பழத்தை ,,
கனியை யறுக்க கருத்தில் நினைந்தாளே ,,
துணிவாயருகினில் புற்றொன்று கண்டாளே ,,
புற்றை வலமாக உத்தமி வந்தாளே ,,
சத்திய நாகனைத் தற்காருமென்றாளே ,,
சேலைதனையவள் சேர்த்து இறுக்கிக்கட்டி ,,
காலைவைத்தேறியே கனியையருத்தாளெட்டி ,,
எட்டி யறுத்தாளே ஏராளமாய்க் கனியை ,,
திட்டமாக எண்ணிப் பார்க்கக்குறைந்தனவே ,,
ஏழுகனிக்குமேல் ஏதோன்றும் கிட்டவில்லை ,,
பாழுமுள்ளம் நொந்து பாவையடைந்தாள்தொல்லை ,,

வசனம்:—லக்ஷிமி தேவியானவள் முதன் முறை அறுத்த கனிகளை எண்ணிபார்க்க ஏழுகனிகள் இருந்தன, மறுபடியும் அறுத்துப்பார்க்க முதல்

இருந்தகனிகளே இருந்தன, மூன்றாவது முறையும் எண்ணியதில் ஏழுகனிகளே இருந்தன, இதைக்கண்டு மனம் வருந்தி மரத்தை விட்டுக்கீழே இறங்க யத்தனிக்கும் சமயத்தில்,

புற்றிலிருக்கும் நாகேந்திரன் கண்டானே தந்தானத்தான
உத்தமியைக் கண்டு ஆவேசம்கொண்டானே ,,
கண்கள் சிவந்திடக் காந்தாளம் பொங்கிடவே ,,
பன்னிரண்டாயிரம் படமெடுத்திடவே ,,
மீசை துடித்திட முன்கோப மாகுதுபார் ,,
ரோஷங்கொண்டு நாகன் மரமீதேறுதுபார் ,,
சர்ப்பம் வருவதைச் சத்தியவதி பார்த்தாள் ,,
கர்ப்பங் கலங்கி உடலெங்கும் வேர்த்தாள் ,,
நாகேந்திரன் தாளைக் கண்டு பணிந்தாளே ,,
சாகப்போவதுண்மை யென்று துணிந்தாளே ,,
சர்ப்பராஜா இந்த தையலைக் காருமையா ,,
அற்பமாக இங்கு யான்வரவில்லையையா ,,
புத்திர பாக்கியம் பெற்றிட இங்குவந்தேன் ,,
சத்திய நாகமுனி சொற்படியே நடப்பேன் ,,
என்னைக் கடிக்காதீர் ஈடேறு தென்சபதம் ,,
சன்மார்க்கரே யுந்தன் தாளடிக்கே அபயம் ,,
இச்சமயத்தினில் ஏதொன்றும் செய்யாதே ,,
பக்ஷமாய்ப் புத்திர பேறடைந்த போதே ,,
பாலூட்டிச் சீராட்டிப் பாலரையான்வளர்த்து ,,
மேலும் மழலைச்சொல் மைந்தர் பேசப்பார்த்து ,,
ஆசைதீர்ந்தவுடன் அரண்மனை வாருமையா ,,
சேஷனே என்னைக் கடித்துக் கோபம்தீரும் ,,
தோகையுரைத்ததை நாகனும்கேட்டதுபார் ,,
ஏகபோகமுடன் யோசனை செய்ததுபார் ,,
உன்றன் மொழிதனை எப்படி நம்புவது ,,
மைந்தரைபெற்றபின் மாறினாலென்செய்வது ,,
நாகனுரைத்ததை நங்கையும் கேட்டாளே ,,
சோகங்கொண்டு நாகன்தனக்குரைப்பாளே ,,
அன்னை தந்தையுடன் ஆளன்மீதாணையையா ,,
என்னைப் படைத்திட்ட ஈசன்மீதாணையையா ,,

சூரிய சந்திரர் சுக்கிரன்மீ தாணையையா தந்தானத்தான
மாறிடேன் மங்கையாள் மாங்கல்யம்மீ தாணை ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

ஆணையிட்டேன் தோஷமில்லை அருமையுன்சொல்மீற
ஏனையா சந்தேகம் எதிர்பாரு மென்றன் சொல்லைத் [வில்லை
தையலுரைத்த மொழி சர்ப்பராஜன் கேட்டானே
பையமன மகிழ்ந்து பாவையற் குரைப்பானே
ஆனால் கேள் ஆரணங்கே யானென்று கூறுகிறேன்
மானார் விழியாளே மாதம் பத்து போனவுடன்
பெண் குழந்தை பிறக்கும் பேதையரே யுன்றனுக்கு
நன்மை யடைந்திடுவாய் நாட்டில் புகழ்வதற்கு
ஆண் குழந்தை பிறந்தால் அரசனுக்குத் தீங்குவரும்
வேண்டாம் சொல்மீருதே விதவையாக வேநேரும்
ஏழு வருஷத்திலே ஏழு மக்களைப் பெறுவாய்
சூழுவொன்பதாம் வருடம் சொற்படி உயிர்தருவாய்
என்றனிடபேரை இட்டழைப்பாய் மக்களுக்கு
இந்தப்படி யழைத்தால் இடரணுகாதவர்களுக்கு
நீ-ஆணை மறந்தாலே ஆரணங்கே பாருமடி
வேணபாவம் சூழுமடி வினைகள் வந்து நேருமடி
வார்த்தை மறவாதே வார்குழலே செய்வாயடி
நேர்த்தியாய்க் குழந்தைகளை நீபெற்று வளர்ப்பாயடி
அப்படியே நல்லதென்று அரவனிடம் கூறிவிட்டு
ஒப்பமுடன் வாராள் உத்தமியாள் தெண்டனிட்டு

வசனம்:—லக்ஷிமிதேவி நாகேந்திரன் சொன்ன வாக்குறுதிக்குச் சம்மதித்து நாகனிடம் விடைபெற்றுத் தனது நகரை நோக்கி,

ஓட்டம் நடையுமாய் ஓடோடி வாராளே தந்தானத்தான
காட்டகந்தன்னிலே காலால் நடந்தாளே ,,
சிங்கமுறங்கிடும் சில்லென்றுகாடுவிட்டாள் ,,
மங்கையிவள் சீறும் வேங்கைப்புலியைக் கண்டாள் ,,
காடுமலைசெடி காறு பொய்கைவிட்டாள் ,,
நாடுநகர்தனைநாதன் பாதத்தைத்தொட்டாள் ,,

வணங்கிப்பணிந்தாளேவல்லவிலக்ஷிமியாள் தந்தானத்தான
கணவரே ஓர்சேதி கேட்டு மகிழ்வீரே ,,
நாகனைக்கண்டதுவும் நல்லவரம் பெற்றதுவும் ,,
ஏகமாய் ஏழுகனியை யடைந்ததுவும் ,,
பழத்தை யருந்தினல் பிறக்கும் குழந்தை யென்றும் ,,
வழுத்தினள் நாதன் மனது களித்திடவும் ,,
மனைவி சமர்த்தினை மன்னவன் கேட்டானே ,,
கனதுள்ளம் பூரித்துத் தழுவியணைந்தானே ,,
வல்லமையுள்ளவென் வனமயில் கோகில்மே ,,
பிள்ளைவரம் பெற்ற பாகுகனிரசமே ,,
பெண்ணைப்பிறந்தாலும் உன்னைபோல்கண்டதில்லை ,,
கண்ணேயுன்னல்புகழ் கொண்டேவிடுத்தேன்கவலை ,,

வசனம்:—நவபோஜ மகாராஜன் தனது மனைவியின் விஷயத்தில் மனதுகனிந்து புரோகிதரையழைத்து ஓர் நன்னளைக் குறித்துச் சோமவாரத்தில் விரத மிருக்கச்செய்து, மங்கை கொண்டுவந்த மாங்கனிகளை யறுத்து, அதன் ரசத்தைப் பிழிந்து சாப்பிடவும், அன்றே கருதரித்த ஏழுவருடங்களில் ஏழு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். கடைசிக் குழந்தை பிறந்தவுடனே, அரசன் குழந்தைகளுக்கு நாமகரணஞ் சூட்ட யத்தனித்துச் சோதிடரை வரவழைத்து ஏழு குழந்தைகள் பிறந்த நாட்களைக் குறித்த சோதிடர் அரசனை நோக்கி சொல்லுகிறார்: ஐயா! அரசனே! தங்களின் குமாரத்திகளில்.

சிறந்த முதல்மக்ள் சூரியநாகம்மா தந்தானத்தான
இரண்டாவதுமகள் சந்திரநாகம்மா ,,
மூன்ருவதுமகள் உத்திரகன்னியம்மா ,,
நான்காவதுமகள் தக்ஷிணகன்னியம்மா ,,
ஐந்தாவதுமகள் பகடசெங்கம்மா ,,
ஆருவதுமகள் முனிகன்னியம்மா ,,
ஏழாவதுமகள் பாலநாகம்மா ,,
தாழாமல் வாழுவாள் சந்தேகமாகுமா ,,
பாலநாகம்மாளால் பார்மன்னரே உனக்கு ,,

மேலான சம்பத்து மாட்சியுண்டு நகர்க்குப் தந்தானத்தான
பாரில் புகழுடன் பாலகி வாழ்ந்திடுவாள் ,,
யாரும் திகைத்திட ஆட்சி புரிந்திடுவாள் ,,
ஏழு பெண்களிலே இவள் பாக்யசாலி ,,
சூழும் புவியில் ஓர் மகனையடைந்திடுவாள் ,,
பெண்கள் எழுவர்க்குப் பாலனவனுகும் ,,
அன்னவனே இந்த நாட்டையாள இருக்கும் ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

உன்றனிட மக்கள் உத்தமரே எழுவர்களும்
சந்தேகமில்லாமல் தழைத்திடுவாரெந்நாளும்
ஒரு தாயின் பிள்ளையையா உலகிலெழுவருண்டு
பெருமையாய் மனந்திடுவார் பொருத்தநிமித்தமுண்டு
ஏழுபேர் அண்ணன் தம்பி இவர்களை மணந்திடுவார்
வாழும் பெருமைகளும் வல்லமையே பூண்டிடுவார்
கனிஷ்ட புதல்வியினல் காசினியில் மன்னவரே
உனது பெயர் விளங்கும் உலகினிலே புண்ணியரே
பேரும்பெருமைசொன்ன பெரியாருக்கு வெகுமதிகள்
தயவாயளித்தானே தாரணியில் பணியணிகள்
மக்களைபூ லக்ஷிமியாள் மகிழ்வாயடைந்தாளே
பக்குவமாய்ப் பாலூட்டிப் பக்ஷமாய் வளர்த்தாளே
ஆடையுடுத்தச்செய்தாள் ஆபரணம்பூணச்செய்தாள்
ஓடையிலே நீராடி ஓடிவிளையாடக் கண்டாள்
பந்தாடி செண்டாடிப் பல்லாங் குழலாடி
வந்திடும் குழந்தைகளை வாஞ்சையாய் உறவாடிக்
கனிஷ்ட புதல்வியர்க்குக் கடந்தது ஈராண்டு
முனைந்து மூன்ரும் வயது உதித்திட யாதுகண்டு
புத்திரப்பேறின்பப் பூரிப்படைந்தாளே
சத்தியம் செய்துவந்த நாளையறிந்தாளே
நாகனுக்களித்தவாக்கு நங்கையர் கவனங்கொண்டா
சோகமிகுதியினற் சோதிடரை வரவழைத்தாள் [ள்

வசனம்:—பூலக்ஷிமியானவள் மக்களை வளர்த்து மகிழ்ச்சியுற்றிருக்கும் சமயத்தில், சோதிடரை வரவழைத்துச் சித்திரா பௌர்ணமி நாளையெனவறிந்து

நாகனுக்குத் தனதுயிரைத் தரவேண்டியிருப்பதால் தனது நாதனிடம் கூறுகிறாள்:

ஆசைக்குகந்தவென் நேசரே கேட்டிடுவீர் தந்தானத்தான
மோசம் வரககாலம் மூண்டது கண்டிடுவீர் ,,
மக்களை யீன்றிட மாதவம் செய்தபோது ,,
இக்கட்டொன்றுமெனக் கின்பரேநேர்ந்தது ,,
மாங்கனிபற்றிட மரத்திலேறும்போது ,,
தீங்குள்ள நாகனும் துரத்தியே வந்தது ,,
நாகனைக் கண்டதும் நான் பயந்து வணங்கி ,,
தோகையுரைத்தநாள் வந்ததையா நெருங்கி ,,
புத்திர பாக்கியம் பெற்றேனே நா[illegible]லே ,,
சத்தியம் செய்தே[illegible]ப்பமிடத்தினிலே ,,
மூ[illegible]ணயின ஒன்பதாம் நல்வயதில் ,,
ஆர்த்துக கடித்தெனை ஐயனே கொல்லென்றதால் ,,
நானளித்த வாக்கு நாளை முடியுதையா ,,
வான்புகழ் மன்னனே வந்தது கண்டமையா ,,
தப்பமுடியாது இத்தரைமீதினிலே ,,
செப்பியவாக்கது சித்திக்கும் நாகனுலே ,,
நாளை பௌர்ணமி நங்கையுயிர்போகும் ,,
பாலரைக்கைவிட்ட பாதகியாகுகும் ,,

வசனம்:—இதைக் கேட்ட அரசன் மந்திரியுடன் ஆலோசித்து தெருக்கோடியில் நான்கு இரும்பு ஸ்தம்பம் நாட்டி, ஒரு ஸ்காந்தப்பெட்டிசெய்து, அப்பேழையில் பூலக்ஷிமிதேவியை சயனிக்கச்செய்துபேழையின் கதவைத்தாளிட்டு ஸ்தம்பத்திற்குமேல் கட்டி, ஸ்தம்பத்திற்கடியில் பிரமாண்டமான அக்கினி வளர்த்தி, அதைச் சுற்றிக் காவலர்களும், அரசன் ஓர் புறமும், மந்திரி ஓர் புறமும், அன்றிரவு முழுதும் விழித்த கண் சிமிட்டாமல் உருவிய கத்தியுடன் காவல் புரியவும், அன்றிரவு நடுஜாமத்தில் நாகமானது தனது சபதத்தை முடித்துக் கொள்ள, ஜடங்கிமலையை விட்டு இறங்கிவரும் சமயத்தில், அக்கினி ஜுவாலையைக் கண்டு, ஞானதிருஷ்டியினுல் சங்கதி முற்றுமுணர்ந்து

அதிக ஆவேசத்துடன் மாயமாகப் பூலக்ஷிமி சயனித்திருக்கும் பேழைக்குள் புகுந்து, பூலக்ஷிமிதேவியை நோக்கி கூறுகிறது:

இது நீதியாகுமோ இயம்படி மங்கையரே தந்தானத்தான
சதிசெய் தொளிந்தாலே தப்புமோ உன்னுயிரே ,,
ஆதியிற் சொன்னதை அறவே மறந்தாயோடி ,,
வாதிக்கவே யென்னை வஞ்சகஞ் செய்தாயோடி ,,
மக்களைப் பெற்றிட மனதார பொய்யுரைத்தாய் ,,
அக்கினி வளர்த்து ஆகாயத்தி லமர்ந்தாய் ,,
எங்கு ஒளிந்தாலும் உன்னை விடுவேனோடி ,,
மங்கையே என்றனுக் காகுது நேரம்டி ,,
நாகனுரைத்ததை நங்கை... கேட்டாளே ,,
தோகையு மெழுந்து தோத்திரஞ் செய்... ,,
உன்னைமோசம்செய்ய உத்தமி யெண்ணவில்லை ,,
மன்னவன் என்றனுயிர் மீட்கச்செய்தவேலை ,,
என்மேல் பிழையில்லை எந்தனைக் காருமையா ,,
உன் சபதந்தன்னை முடித்துச் செல்லுமையா ,,

வசனம்:—என்று லக்ஷிமிதேவி கூற, நாகன் லக்ஷிமிதேவியின் கண்டத்தைக் கடித்துச்செல்ல, பொழுது விடிந்ததும், அரசன் பெட்டியைத்திறந்து பார்த்து. லக்ஷிமிதேவி உதிரவெள்ளத்தில் புரண்டிருக்கக்கண்டு மன்னன் வருந்த, லக்ஷிமிதேவி ஆளனைநோக்கிக் கூறுகின்றாள்:

நல்லதங்காள் கதை அம்மானை.மெட்டு

வருந்தாதீர் நாயகரே வல்லவரே மன்னவரே
பெருந்துயரடைவதினால் பிழைப்பேனோ உத்தமரே
என்னைத் தகனம்செய்து - என் - மக்களைக் காப்பாற்றும்
கன்மணி குழந்தைகளைக் கைவிடாதீ ரெப்பொழுதும்
மடிந்து மறைந்தேனென்று மறுதாரம் தேடாதீர்
கடவாதிருந்த மொழி காதலரே யறிவீர்
மறுதாரம் நீர் மணந்தால் மக்களுக்குக் கஷ்டமையா
அருமை யறியாமல் ஆக்கினைகள் செய்வாளையா

சக்களத்தி பிள்ளையென்று சதிசெய்து கொன்றிடுவாள்
பக்குவமாய் உன்னாட்டைப் பறிக்க நினைத்திடுவாள்
ஏழு குழந்தைகளை இனிதுடனே நீ வளர்த்துச்
சூழும் புவிதனிலே மணமுடித்து வாழவைத்து
மக்களிட ஆதரவில் மன்னவரே நீயிருப்பீர்
சிக்கில்லா இந்நாட்டைச் சீராய் ஆட்சிபுரிவீர்
என்றன் பெயர்விளங்க இனத்தோர் உனைபோற்ற
விந்தையுடன் குடிகள் விச்சிதரே உனை வாழ்த்த
நிந்தனையில்லாமல் நீ நடக்க வேணுமென்று
சுந்தரி லக்ஷிமியாள் சொல்லி உயிர்விடுத்தாள்

வசனம்:—லக்ஷிமிதேவி மறைந்தவுடன், மன்னன் மனைவியையெடுத்துத் தகனம்செய்துவிட்டுத் தன் மக்களுக்கு வேண்டிய சம்ரக்ஷணைகளை அரசன் தானே செய்து வரவும், இதைக்கண்ட மந்திரியும், குடி ஜனங்களும், அரசனை மறுதாரம் தேடிக் கொள்ளும்படி எவ்வளவோ சொல்லியும், அரசன் அதை மறுத்துவிட்டதால், மந்திரி சூரியநாகம்மாளை தன் தந்தையிடம் சென்று மறுதாரம்தேட மார்க்கஞ் செய்யும்படி அனுப்ப சூரியநாகம்மாள் தன் தந்தையிடம் வந்து பணிந்து சொல்லுகிறாள்:

வந்தனம் வந்தனம் தந்தையே உன்பாதம் தந்தானத்தான
சிந்தை வருந்திட வந்ததே அநீதம் ,,
எங்களைப் பெற்று வளர்த்திட்ட தந்தையரே ,
மங்கையின் சேதி மன்னித்துக் கேட்பீரே ,,
தாயற்றபோதெங்கள் சீரற்றுபோச்சுதையா ,,
மாயமாய் மறைய மக்களைப் பெற்றாளையா ,,
ஆடையுடுத்தி அலங்காரஞ் செய்திடவும் ,,
ஓடையிலே மஞ்சள் பூசிக் குளித்திடவும் ,,
கூந்தலைக் கோதவும் கோலப் பணியணிய ,,
மாந்தருக் கன்றி மற்றவர்க்கழகல்ல ,
சின்னம் சிறுவய தாக இருக்கையிலே ,,
மன்னவரே யெம்மை மஞ்சநீராட்டிவைத்தீர் ,,
நீதியல்ல இனி நீங்கள் ஆடையுடுத்த ,,

சேதி பிதுபாரில் கேலிக்கிடமிருக்க தந்தானத்தான
சிற்றன்னை யிருந்தால் சீரும் சிறப்படைவோம் ,,
அற்புத மாகிய ஆடையுடுத்திடுவோம் ,,
அன்னைக்கு மேலாக அன்புபாராட்டிடுவாள் ,,
உன்னதமா யன்னம் ஊட்டி யுபசரிப்பாள் ,,
தந்தையே எந்தன்சொல் தட்டிட வேண்டாமையா ,,
சிந்தை களித்திடச் செய்வீர் விவாகமையா ,,

வசனம்:—இதைக்கேட்ட மன்னன் திடுக்கிட்டு ஏதுசொல்வான்.

கட்டபொம்மு வர்ணமெட்டு

சொல்லாதே சொல்லாதே என்மகளே அம்மா என்மகளே
சொல்புத்திகேட்டாலே கஷ்டம் நேரும் அம்மா
சொல்புத்திகேட்டாலே கஷ்டம் நேரும்.

தாய்சொன்ன சத்தியத்தை என்மகளே அம்மா என்மகளே
தவறினாலே பிழை நேரும் கண்டாய் அம்மா
தவறினாலே பிழை நேரும் கண்டாய்

மறுதாரம் செய்தாலே என்மகளே அம்மா என்மகளே
மனகஷ்டத்தால் நீங்கள் மடிய நேரும் அம்மா
மனகஷ்டத்தால் நீங்கள் மடிய நேரும்.

வசனம்:—என்று அரசன் மேலும் தன் புத்திரியாகிய சூரியநாகம்மாளுக்குப் புத்திகூறுகிறார்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

சூரியநாகம்மாள் சொன்னமொழிகேட்டுப்
பாரினை ஆட்சிசெய்யும் போஜன் மனம்திகைத்து
உற்று நினைத்தானே ஒருகோடி யோசனையை
மற்றும் பலவிதமாய் மனதில்கொண்டு பாலகியை
வாரியெடுத்து மன்னன் மடிமீதமரவைத்து
ஆரித்துப் பூரித்து ஆரணங்கைத் தான்பார்த்து
மங்கையே யாரேனும் மறுதா தனுப்பினரோ
உங்கள் சுயபுத்தியினால் உத்தமியே சொன்னீரோ

மறுதாரம் கொண்டாலே மனக்கவலையாகுமம்மா
குறும்பு நேரும் உங்களுக்குக் கொள்ள நினைப்பாளம்
உங்களிட தாய்போல உலகத்தில் கிடைப்பாரோ [மா
மங்கையர் வேறுகொண்டால் மனம்போல் நடப்பா
சுயநலத்தையே கருதி சூதுவாது செய்திடுவாள் [ளோ
நயமாக உங்களையே நம்பிக்கை துரோகம்செய்வாள்
பணிவிடைகள்செய்வதற்குபணிப்பெண்ணுளர்மத்திடு
துணிவாகப் பேசாதே துன்ப மனேகம் வரும் [வேன்

வசனம்:—என்று கோபத்துடன் அரண்மனைக்குச் சென்றுவிட்டான். இதை அறிந்த மந்திரி மறுநாள் அரசன் எண்ணெய்ஸ்நானம் செய்கையில், அரசனை யறியாமல், மந்திரி எண்ணெய் தேய்க்கும், வேலையாளிடம் ஈடு மருந்தொன்றை யளித்து எண்ணெயில் கலந்து ஸ்நானம் செய்விக்கும்படி செய்ய, அரசன் ஸ்நானம செய்தவுடன், தனது புத்தியானது தடுமாறி மறுதாரம் விவாகம் செய்துகொள்ளப் பிரியமுற்று மந்திரியை யழைத்து பெண்தேட அனுப்ப, உடனே மந்திரி நயனபட்டணம் தவளவேந்தனின் மகளாகிய மாணிக்கதேவியை விவாகம் முடித்தான், பிறகு அங்கு சில நாளிருந்து அரசன் தனது நாட்டிற்கு அழைத்துப்போகத் தனது மனைவியை நோக்கிக் கூறுகிறுன்:

பெண்ணரசே இளம் பூவையே மாமயிலே தந்தானத்தான
அன்னத்தைப் பழித்த ஆரணங்கே குயிலே ,,
புறப்பட்டுப் போவோம் பூச்சக்ர பட்டணமே ,,
சிறப்புடனே ஏழு மக்களுடன் நாமே ,,
நாளேறிப்போகுது நாயகியே பெண்ணே ,,
ஆளவேநம்நாட்டையாருமில்லைசொன்னேன் ,,
மாணிக்கதேவியாள் மன்னவன்சொல்கேட்டு ,,
காணவே தனது தந்தையை கும்பிட்டு ,,
நாங்கள் நாட்டிற்கு போகவிடைதாரும் ,,
தாங்கள் எங்களை மகிழ்ந்தாசி கூறும் ,,
விடைபெற்று நாதனுடனே பயணமானுள் ,,

மடமயிலேழு மக்கள் நடக்கலானார் தந்தானத்தான
ராஜனும் ராணியும் பல்லக்கிலேறிவர ,,
நேசமுடன் மக்கள் பின்னால் பல்லக்கில்வர ,,
காடு வனாந்தரம் கானாறு பொய்கைவிட்டார் ,,
நாடு நெருங்கி நலமாய் வருகலுற்றார் ,,

வசனம்:—அரசன் தனது மாமனாரிடம் விடை பெற்று மாணிக்கதேவியுடனும் தனது மக்களுடனும் பூச் சக்ர பட்டணத்தை நோக்கி வரும் சமயத்தில், தனது நாட்டிலுள்ள,

கோட்டை இடியுது கொத்தளஞ் சாயுதுபார் தந்தானத்தான
நாட்டிய தூண்கள் நடுங்க முறியுதுபார் ,,
வருகும் வழியிலே வாசற்படி இடரும் ,,
பெருகும் அரசன் தலைபாகை கீழ்தவறும் ,,
சாலுங்கரகமும் சாய்ந்து உடைந்ததுபார் ,,
பாலூட்டும் பசுவும் பதறமடிந்ததுபார் ,,
பட்டத்து யானையும் விட்டது தன்னுயிரை ,,
கட்டலின் கால்கள் முறிந்து விழுந்திடவே ,,
பொல்லாசகுனங்கள்பொருந்தது அரசனுக்கு ,,
சொல்லொணாத்துயரம் தோணுதுவேந்தனுக்கு ,,

வசனம்:—அரசன் மாணிக்கதேவியுடன் தனது நாட்டிற்கு வரும் சமயம் பலவிதத் துர்ச்சகுனங்களைக் கண்டு மனது கிலேசங்கொண்டு.

ஊருக்கு மேற்கே ஒருகாத தூரத்திலே தந்தானத்தான
சீருளள மாளிகையொன் றமைத்தான் வைரத்தாலே ,,
வைரத்தாலே ஒரு மாளிகைகட்டி வைத்தான் ,,
மெய்ம்மறந்துமன்னன்மாதை அதிலமைத்தான் ,,
தனித்துவைத்தான் தையல்மாணிக்கந்தன்னை ,,
கனிவுடன் காவல் கருத்தா யமைந்தனனே ,,
அரசன் புதல்விகள் அன்னங்களேழுபேரும் ,,
சிரமமில்லாமல் சிற்றன்னை யிடத்தினிலும் ,,
அன்பு பாராட்டியே ஆசையுட னிருந்தான் ,,
கண்ணின் மணிபோலே கட்டழகிவளர்த்தாள் ,,

மாது முகத்திலே மன்னன் விழிக்காமல் தந்தானத்தான
சாதித்தானே மௌனம் வேதனை தாளாமல் ,,
மாணிக்கதேவியின் மாடிக்குப்போவதில்லை ,,
தானே தனித்திருந் தாகினனே தொல்லை ,,

வசனம்:—அரசன் மாணிக்கதேவியின் முகத்தில் விழிக்காமல் தனது மாளிகையில் வசித்து வரும் சமயம், டில்லி ஜமாபந்திக்கு வரும்படியாக டில்லி பாக்ஷா லிகிதம் அனுப்ப, அதை அரசன் கண்டு அங்குபோக யத்தனித்து மாணிக்கதேவியின் மாளிகையை யடைந்து தனது புதல்விகளை ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொள்ளும்படி தெரிவித்து செல்லவும், அன்றுமுதல் புதல்விகளை அருமையுடன் வளர்த்து வர, சிலநாள் சென்ற பிறகு ஒரு நாள் தனியாக அமர்ந்து மாணிக்கதேவியானவள்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

ஐயையோ தெய்வமே அவனியிலே ஏன் பிறந்தேன்
வையகந் தன்னிலிந்த வாழ்விற்கோ நான் சமைந்தே
தாலிகட்டி மூலையிலே தனித்திருக்க யென்விதியோ
மாலையிட்டுத்தனியேவைக்க என்-மாதாசெய்ததீவினை
பெண்ணைப்பிறந்த கொள்ளை மண்ணைப் பிறந்தாலும் [யோ
புண்ணிய வான்களிட பாதம் மிதிபடுவேன்
ஆகாத நாளையிலே அரும்பாவி நான்பிறந்தேன்
வாழாக்குமரியென்று வாழ்க்கையிலே பெயரெடுத்தேன்
என்-சக்களத்திபெற்றுவைத்த சதிகாரமக்களாலே
துக்கம் யான் காத்திருக்கத் துணிந்தார் புவிதனிலே
பாழான பிள்ளைகள்தான் பாருலகில் சாகவேணும்
சூழும் புவிதனிலே நான்-சுகமுடனே வாழவேணும்
நாதன் வருவதற்குள் நறுக்கி புதைக்கவேணும்
ஏதேனும்பொய்யுரைத்த இணைபிரியாதிருக்கவேணும்
என்று மனந்துணிந்து இளங்கொடியாள் ஏது செய்
கொன்றுவிடுவதெனகொம்பனையாள்மனந்துணிந்தாள் [தாள்

வசனம்:—என மனந்துணிந்து அன்று பகல் முழுதும் சாதம் சமைக்காமல் கட்டிலின்மீதே மௌனமாகச் சயனித்திருக்கவும், அச்சமயத்தில் பாலர்களுக்குப் பசியின் கொடுமையானது தாளமுடியாமல், சூரியநாகம்மாளும், மற்றும் ஆறுபேர்களும். தனது சிற்றன்னையிடம் வந்து:

வன்பசிவாட்டுது வயிற்றைப் பசிக்குதம்மா தந்தானத்தான
கண்பஞ்சடையுது கால்தடுமாறுதம்மா ,,
காதையடைக்குது கருத்தை மயக்குதம்மா ,,
சாதமருந்தினல் சற்றே தணியுமம்மா ,,
பசியின்களைதீர பாலாமிர்தம்தாரும் ,,
கசியுதெங்கள் மனம் கவலையே ஆகுதம்மா ,,
புழுபோல் சுருண்டங்கே பூமியிலே விழுந்தார் ,,
விழுந்து பாலகர்கள் வித்தகியைப்பணிந்தார் ,,
பணிந்து புலம்பிடும் பாலரைக் கண்டாளே ,,
கனிந்திடா துள்ளம் கடுங்கோபங்கொண்டாளே ,,
ஜன்னி ஜுரத்தினல் தலையை இடிக்குதடி ,,
சண்டாளி மக்களே சற்றே பொறுங்களடி ,,
உங்களுக்குழைத்திட இப்புவியில் பிறந்தேன் ,,
பழுதின்றி வளர்ந்து பாதகனை மணந்தேன் ,,
பொல்லாத நோயினல் புரண்டு இருக்கையிலே ,,
வல்லுயிர் வாங்கிட வந்து பிறந்தீர்களே ,,
எழுந்திருந்து ஓடி இடித்தாளே தவடையிலே ,,
விழுந்து புலம்பிட உதைத்தா ளிடுப்பினிலே ,,
அடிபட்ட மக்களும் அம்மாடி யென்றழுதார் ,,
துடிதுடித்தே மக்கள் சோக்கங் கொண்டே விழுந்தார் ,,

வசனம்:—மாணிக்கதேவியிடம் அடிபட்ட மக்கள் தரையில் விழுந்து புலம்ப, மாணிக்கதேவி மறுபடியும் எழுந்து ஏழுபாலர்களிடம், ஏழு சில்லிக் குடத்தைக் கொடுத்து, தண்ணீர் கொண்டு வாருங்கள், சாதம்சமைத்துப் போடுகிறேனென்று அனுப்ப அக்குடங்களை எடுத்துக்கொண்டு அரண்மனையின் பின் புறத்திலுள்ள கிணற்றில் தண்ணீரெடுக்கச்

சென்று கிணற்றில் ஜலமெடுக்க, அதில் தண்ணீர் கொஞ்சமும் நில்லாமல் போகவும், பசியின் கொடுமையினுல் ஜலமெடுக்க முடியாமல் ஏழுமக்களும் பூமியில் சாய்ந்தனர். அச்சமயம் மடிந்த பூலக்ஷ்மிதேவியானவள் தோன்றி பாலர்கள் பசியாரப் பழவர்க்கங்களைப் பக்கத்தில் வைத்து பாலர்களை எழுப்பவும், பாலர்கள் எழுந்து பழமுண்டு பசியாறி, பிறகு சில்விக்குடத்தில் ஜலமெடுத்துப் போகவும், வீட்டிற்கு வருவதற்குள் அதில் கொஞ்சமும் ஜலமில்லாததால் மாணிக்கதேவி அதைக்கண்டதும் அதிக கோபங்கொண்டு சொல்லுகிறுள்:

தண்ணீரெங்கேயடி தடிக்கழுதைகளா தந்தானத்தான
என்ன மம்மதையாய் இதையுடைத்தீர்களே ,,
உங்கள் இழவுக்கு உழைக்கவோ பிறந்தேன் ,,
சங்கை கெட்டசதி காரனை நான் மணந்தேன் ,,
வேலைசெய்யாமலே வேசியைப்போல் மினுக்கி ,,
வேளைக் கொருஉடை வேஷமிட்டுக் குலுக்கி ,,
சீவி ஜடைபோட்டு சிங்காரித்துத் திரிந்தால் ,,
பாவியுங்களுக்கு பணிசெய்ய யென்னைக்கொண்டார் ,,
சோம்பல் குடிகொண்டு சோலையிலே திரிந்தால் ,,
ஆம்படையான்வந்தால் அப்போது யென்னசெய்வீர் ,,
என்று-தாடையிலிடித்துத் தலையிலடித்தாளே ,,
ஆடைகிழித்து அலற வுதைத்தாளே ,,
அடிபட்ட மக்களும் அம்மாடி யென்றழுதார் ,,
வடித்துக் கண்ணீரதை வாய்விட்டு ஏதுசொல்வார் ,,
தாயற்ற மக்களை தாயே அடிக்கலாமா ,,
சேயரென்னபிழை செய்தோம் அதைசொல்லம்மா ,,
தந்தை இதைக்கண்டால் தாளமனம் வருமா ,,
சிந்தை கலங்கிட செய்வதும் நீதியாமா ,,
போனாலும் போகுது புண்யவதி தாயே ,,
தோணும் பசிதனைத் தீர்த்தாதரிப்பாயே ,,

ஆவிதுடிக்குது அன்னமில்லாதாலே தந்தானத்தான
நாவை வறட்டுது நடக்கு துடல்மேலே ,,
என்று மக்கள் சொல்ல இளகியவள்போலே ,,
சண்டாளியாமவள் சதியை நினைத்தாளே ,,

வசனம்;—உடனே மாணிக்கதேவி அதிக மன மிரங்கியவள்போல் ஓடி, ஏழுகிண்ணத்தில் பாஷாணத்தைக் கலந்த பாலைக் கொண்டுவந்துகொடுக்க, அதைச் சிறுவர்கள் குடித்து மயக்கத்தினல் தரையில் சாய்ந்துவிடவும், உடனே அவர்களை இழுத்துவந்து வீட்டின் பின்புறத்தில் போட்டு, எழுவர்களுக்கும் ஏழுபள்ளம் தோண்டவும், அச்சமயத்தில் இச் சண்டாளியின் சதியையறிந்த லக்ஷிமிதேவியானவள் மக்களைத் தன் மாய்கையால் எழுப்பவும், எழுந்த மக்களை மாணிக்க தேவியானவள் பார்த்துத் திடுக் கிட்டு, அதிக ஆவல் கொண்டவள்போல் அருகில் ஓடி வந்து:

நல்லதங்காள் கதை அம்மானை மெட்டு

செல்வச் சிறுவர்களே சீரழிந்து நின்றீர்களே
துள்ளித் தரைதனிலே சோர்ந்து விழுந்தீர்களே
நான்-களைத்தீரப்பால்கொடுத்தேன்கனத்தபழிவைத்தீர்களே
இளைப்பாறப்பால்கொடுத்தேன் எனக்கிடரை வைத்தீர்களே
தந்தைக்குத்தான் வேம்பானேன் தனித்திருக்கபெண்டானே
சொந்தமுள்ள உங்களுக்கு சீறிவரும் பாம்பானேன் [ன்
பாவிபிறந்த கொள்ளை பாரினிலே யாகாது
தாவினும் நெருப்பில் இந்த தனித்ஜடலம் வேகாது
உம்-தந்தை இதைக் கேட்டால் தள்ளிக் கழுத்தறுப்பார்
நிந்தனை செய்திடுவார் நிஷ்டூர மாக்கிடுவார்
பழிக்க உலகினிலே பாதகியான் பிறந்தேன்
சுழியும் பிசகாமல் சூழ்வினையினல் மெலிந்தேன்
வாங்களடிபெண்டுகளா வருத்தமதைபோக்கிடுவோம்
பாங்கான காளியம்மன் பாதம் பணிந்திடுவோம்
அம்மனைப் பணிந்தாலே ஆபத்து விலகுமடி
இம்மாநிலந்தனிலே இடரின்றி வாழ்வீரடி

என்றுமாணிக்கதேவி ஏழுமக்களை யழைத்து
நன்மொழியாய்ப் பேசி நகரைவிட்டுக் காடடைந்து
பாழடைந்த காளிகோயில் பாவியவள் தேடிவாராள்
சூழ்ந்த புலிகரடி தூங்கும் வனமடைந்தாள்
கோயில்கதவதனை கோதைதிறந்தாளே
பாவியும் மக்கள்தனைக் பார்த்து உரைப்பாளே
அருமைக் குழந்தைகளே ஆளவந்த செல்வங்களே
வருவீரடி கோயிலுள்ளே வளமான என்மக்களே

வசனம்:—என்று கோயிலுக்குள்ளழைத்துச் சென்று, அவர்கள் உள்ளே சென்றதும் கதவைத் தாளிட்டுப் போய் விடுகிறாள். இதைக்கண்ட சிறுவர்கள் பசியின் கொடுமையினால் பதறவும், பிறகு மடிந்த தாயின் மகிமையால், அக்கோயிலுக்குள் ஒரு தேன் கூண்டு அமைய, அத்தேனைப்புசித்து மக்கள் ஆனந்த முடனிருக்கின்றனர். உடனே, டில்லியில் நித்திரை செய்திருக்கும் நவபோஜனின் சொப்பனத்தில் லக்ஷிமிதேவி தோன்றி சங்கதிகளையுரைக்க, உடனே நவபோஜன் டில்லிபாஷவிடம் விடைபெற்றுத் தனதில்லமடைய, அங்கு தன்மக்களைக் காணாததால் அரசன் மாணிக்கதேவியை நோக்கி:

எந்தனேழுமக்கள் எங்ஙனம் சென்றாரடி தந்தானத்தான
சந்தடி காணோமே சங்கதி என்னவடி ,,
பார்த்து அவர்களைப் பத்துநாளாச்சுதடி ,,
காத்திடுவா யென்றுன் கைவசம் விட்டேனடி ,,
மக்களைக் காணாமல் மனந்தடுமாறுதடி ,,
இக்கட்டென்ன்செய்தாய் என்னிடம் கூறுமடி ,,
மன்னனுரை மொழி மாணிக்கம் கேட்டாளே ,,
கன்னிதன்னுதனைக் கட்டியழுதாளே ,,
பக்கத்துவீட்டிலே சோரங்கம் போனாலே ,,
அக்கம்பக்கத்திலே சிரிக்கவைத்துச்சென்றாள் ,,
எத்தனைபாடுகள் பட்டேன் வீணாச்சுதையா ,,
உத்தமரேமக்கள் விட்டென்னைச்சென்றாரையா ,,
பட்டதோர்பாடெல்லாம் பாழாகபோச்சுதையா ,,

லக்ஷிமி கனவில் நாதனே வந்தானையா தந்தானத்தான
பாரடி நீயென்று யென்றனைக் கேட்டாளையா ,,
கூறடி யென்றென்னை ஓங்கி யறைந்தாளையா ,,
எட்டி யுதைத்தாளே ஈரல் குலைகலங்க ,,
திட்டமாய் ஈரேழு புவனமெல்லாம் நடுங்க ,,
திக்கில்லாபாவியாய் தியங்கவைத்துச்சென்றாள் ,,
ஊட்டி வளர்த்து நான் ஊதாரியானேனே ,,
நாட்டிற்கு ஆகாத நாயகியானேனே ,,
தாரைதாரையாகத் தையல்கண்ணீர்வடித்தாள் ,,
வேரற்ற மரம்போலே விழுந்து புரண்டழுதாள் ,,
கோதையுரைத்ததைக்கொற்றவன்கேட்டானே ,,
ஏதுந்தோன்றாமல் எழுந்து நடந்தானே ,,

வசனம்:—மன்னனுக்கு ஒன்றும் புலப்படாமல் தூதர்களுடன் கானகம் சென்று போகும்போது தனது மக்களைப் பாழடைந்த கோயிலிலுள்ளிருக்கக் கண்டு கழுத்திலுள்ள மணிகள் சிந்தி இருந்ததை அடையாளங்கண்டு மனம் வருந்தி கோயிலுக்குள் வந்த சங்கதி ஏதென்று கேட்கவும், அதற்கு சூரிய நாகம்மாள் கூறுகிறாள்:

கட்டபொம்மு வர்ண மெட்டு

சிற்றன்னை தாயிடம் ஒப்படைத்தீர் அப்பா ஒப்படைத்தீர்
சீரடைந்த சேதியை சொல்லுகிறேன் அப்பா
சீரடைந்த சேதியை சொல்லுகிறேன்

சொல்லநாவு தடுமாறுதையா அப்பா மாறுதையா
சொன்னாலே துயர்மீலுதையா அப்பா
சொன்னாலே துயர்மீலுதையா

தந்தையே நீங்களும் சென்றதுமே அப்பா சென்றதுமே
தாயுக்கு மேலாகவுபசரித்தாள் அப்பா
தாயுக்கு மேலாகவுபசரித்தாள்

கொல்லமிகவே துணிந்தாளிவள் அப்பா துணிந்தாளிவள்
கள்ளமில்லா எங்களெழுவரையும் அப்பா
கள்ளமில்லா எங்களெழுவரையும்

112/67

விரதம்ஒன்று உண்டுஎன்று சொல்லி அப்பா என்றுசொல்லி
வெறுவயிருக இருக்கச்செய்தாள் அப்பா
வெறுவயிருக இருக்கச்செய்தாள்

பசியாலே நாங்கள் பதறலுற்றேம் அப்பா பதறலுற்றேம்
பார்த்துபல்லை மிகவேகடித்தாள் அப்பா
பார்த்துபல்லை மிகவேகடித்தாள்

பாங்குடனே சில்லி பானையிலே அப்பா சில்லிபானையிலே
பாவியும் ஜலம் கொண்டுவாவென்ருள் அப்பா
பாவியும் ஜலம் கொண்டுவாவென்ருள்

சொல்வார்த்தை தட்டாமல் சென்றேமையா அப்பா சென்றேமையா
சிறிதுஜலமதில் கிட்டவில்லை அப்பா
சிறிதுஜலமதில் கிட்டவில்லை

நாக்கிவந்த பானையை போட்டுடைத்தாள் அப்பா போட்டுடைத்தாள்
நோக்கியே தாடையின் மீதடித்தாள் அப்பா
நோக்கியே தாடையின் மீதடித்தாள்

கனிவாகவே பேசி பாலைக்கொண்டு அப்பா பாலைக்கொண்டு
கலக்கினுள் விஷத்தை தான்சேர்த்து அப்பா
கலக்கினுள் விஷத்தை தான்சேர்த்து

அறியாமலே நாங்கள் உண்டதாலே அப்பா உண்டதாலே
ஆதரித்தா லெங்களைப் பெற்றவளும் அப்பா
ஆதரித்தா லெங்களை பெற்றவளும்

பொல்லாக்கனவு ஒன்று கண்டோம் அப்பா ஒன்றுகண்டோம்
பொட்டனவே இவள் தட்டக்கண்டோம் அப்பா
பொட்டனவே இவள் தட்டக்கண்டோம்

உயிர்பிழைத்து நாங்கள் எழுந்திடவே அப்பா எழுந்திடவே
உபசரித்து எங்களை வாவென்ருளே அப்பா
உபசரித்து எங்களை வாவென்ருளே

காளிகோயிலுக்கு போகவேண்டி அப்பா போகவேண்டி
களிப்புடன் எங்களை அழைத்துச்சென்ருள் அப்பா
களிப்புடன் எங்களை அழைத்துச்சென்ருள்.

காளிகோயிலுள் தள்ளினலே அப்பா தள்ளினலே
தாளிட்டுப் பூட்டியே சென்றுவிட்டாள் அப்பா
தாளிட்டுப் பூட்டியே சென்றுவிட்டாள்.

## பொது வசனம்

மேற்படி கருத்துக்களைத் தாய்மார்களுக்காக "கும்மி வர்ணமெட்டிலும்" எழுதலானேன். இரண்டு பாடல்களின் கருத்துகளும் ஒன்றேதான்.

### கும்மி வர்ண மெட்டு.

சிற்றன்னையாள் செய்த குற்றமெல்லாம்சொல்ல
சிதறு தென்னுவு தடுமாறி—மனம்
பதறுதே உள்ளம் துயர்மீறி—யான்
உற்றவிஷயத்தை ஒன்றுமொளியாமல்
உத்தமியாள் சொல்வேன் கேளுமையா—என்ற
சித்தந் துடிக்குது பாருமையா. [ன்

தந்தையரேநீங்கள் டில்லிக்குச் சென்றதும்
தாயிற்கு மேலா யுபசரித்தால்—ஏழு
சேயர்க்கும் பாலமிர்த மளித்தாள்—ஏதோ
விந்தையாய் எங்களை விரதமிருமென்று
வெருட்டித்தலைமீதிலே யடித்தாள்—மண்ணில்
புரட்டியப்பாவி எட்டியுதைத்தாள்.

நாங்கள் பசியாலே சோங்கியழுகவும்
நறநறவென்று பல்லைக்கடித்தாள்—உங்கள்
இழவுக்குழைக்கிறேனென்றுரைத்தாள்—பின்
பாங்குடனே சென்று பானையிலே ஜலம் [னும்
பாவியும் கொண்டுவா வென்றுரைத்தாள்—சில்
பானையை எங்கள் கையில் கொடுத்தால் [லிப்

சில்லிப்பானை கொண்டு ஜலமெடுக்கசென்றோம்
சிறிதுமதில் ஜலம் நிற்காமல்—மனம்
வருந்தினோம் ஒன்றும் முடியாமல்—மிகத்
தொல்லையுற்றே கொஞ்சம் ஜலமெடுத்துவந்தோம்
தூக்கியேபானையைப் போட்டுடைத்தாள்—கையி
னோக்கியே தாடைமீதடித்தாள். [ல்

பட்ட அடியாலும் பசிதீவினையாலும்
படுத்தோம் தரைமீதில் பட்டினியாய்ப்—பின்பு
அடுத்தாளே எங்களிடம் தனியாய்ப்—பாவி
கட்டியணைத்தவள் கனிந்தவள் போலவே
கிண்ணத்தில் பாலைத்தந்தாள் கனிவாய்—விஷம்
தன்னைக்கலந்தவளும் துணிவாய்

விஷப்பாலருந்தி வேகத்தாலே யாங்கள்
விக்கலிட்டுமயங்கிப் படுத்தோம்—பெற்ற
வித்தகியான தாயை நினைத்தோம்—அவள்
நசுக்கிப்புதைத்திட நங்கை ஏழுபள்ளம் [கம்
நாட்டமுடன்தோண்ட நாங்கள்கண்டோம்-மயக்
மாய்கையாய் நீங்கி பிழைத்துக் கொண்டோம்

மாண்டவர் பிழைத்து எழுந்ததைக் கண்டதும்
மனந்தடுமாறி அருகில் வந்தாள்—வெகு
குணசாலிபோலக் கட்டியழுதாள்—பின்னும்
வேண்டியே கும்பிட்டு வாருமென்றெங்களை
வேகமுடனே அழைத்துச் சென்றாள்—காளி
கோயிலுனுள்ளாகப் போகச் செய்தாள்.

வசனம்:—இதைக்கேட்ட அரசன் மனங்கொதித்துத் தனது மாளிகைக்கு மக்களை அழைத்துச் சென்று, அன்றுமுதல் மாணிக்கதேவியின் முகத்தை ஏறெடுத்துப் பாராமலிருந்து விட்டான். அரசன் இவ்வித மிருப்பதைக்கண்ட மாணிக்கதேவி தனது தாய் தந்தைக்குக் கடிதமெழுத, அவர்கள் அவன் வசியமாகும்படி ஓர் ஈடு மருந்தைத் தயாரித்து அனுப்பவும், அவள் அம்மருந்தை அரசனுக்கு அறியாமல் உபயோகப்படுத்தவும், மாணிக்கதேவியின்மீது காதலதிகரித்து மாணிக்கதேவி மாளிகைக்குத் தனித்துவர, அன்னவள் இதுதான் சமயமென்று அவனுடைய காதலுக்கு இணங்காதவளாய் பாவனைசெய்து. தனது ஏழு மக்களையும் காட்டில் விட்டுவந்தால் சம்மதிப்பதாகத் தெரிவிக்க, அதற்கு அரசன் சம்மதித்துகட்டு

சாதம் தயாரித்துக்கொண்டு மறுதினமே ஏழு மக்களைத் தனது மாமன் வீட்டிற்குப் போய்வரலா மென்று அழைக்கின்றான்.

தவத்திலுதித்தவெள் தங்கச்சித்திரங்களே தந்தானத்தான
கவனமா யென்மொழி கேட்டு வருவீர்களே ,,
தாய் மாமனுங்களைப் பார்த்திடவேணுமென்று ,,
தந்தி யனுப்பினன் போவோம் வருவீரின்று ,,
என்ற தந்தைமொழி ஏந்திழைமார்கேட்டு ,,
நன்றெனவே புறப்பட்டாரே கைகோத்து ,
ஏழு பெண்களிடம் ஏழு அடைகொடுத்தான் ,,
சூழும் மன்னன்கட்டு சாதமே கைபிடித்தான் ,,
நாட்டை விட்டே தனிக் காட்டுவழி நடந்தான் ,,
வாட்டமுடன் வெகு தூரமவன் தொடர்ந்தான் ,,

வசனம்:— மக்களை அரசன் அழைத்துவரும் சமயம், பாலநாகம்மாள் அரசன் கொடுத்த அடையைக் கொஞ்சம் காக்கைக்குப்போடவும், அது சுருண்டு மடியவும், அதைக்கண்டு தமக்கைகளிடமிருந்த அடைகளை வாங்கி அரசனை யறியாமல் ஒரு குழிதோண்டி அதில் புதைத்து விட்டுச் சென்றனர், அதிக தூரம் சென்றதால் குழந்தைகள் நடக்க முடியாமல் தத்தளிக்கப் பொழுதும்அஸ்தமித்தது. அந்த கானகத்தில் ஓர் கல்லால விருஷத்தின் கீழ் அனைவரும் சயனிக்கச்செய்து, அரசனும் குழந்தைகளுக்கு நடுவில் சயனித்துக் கொண்டான் நடுஜாமத்தில் அரசன் எழுந்து ஓர் தாழந்துண்டை எடுத்து அதற்குத் தன்னுடைய ஆடைகளை யுடுத்தி, மக்களுக்கு நடுவில் வளர்த்திவிட்டு, அன்றிரவே மாணிக்கதேவியிடம் போய்ச் சேர்ந்து சுகமுடனிருந்தான். பொழுது விடிந்ததும், சூரியநாகம்மாள், அருகிலிருக்கும் தாழந்துண்டைத் தந்தையென நினைத்துப் புலம்புகிறாள்.

பொழுதுவிடிந்தது புறப்படும் தந்தையரே தந்தானத்தான
சுடும் வெய்யலுக்குமுன் செல்வோம் வருவீரே ,,
வெய்யிலுக்கு முன்னே வேகமுடன் நடப்போம் ,,
அய்யனே மாமனின் அரண்மனையே யடைவோம் ,
என்று-தட்டியெழுப்பினல் தந்தையெனமதித்து ,,
திட்டமாய் ஒன்றும் பேசாதிருக்கப் பார்த்து ,,
ஐயையோ தந்தையே ஆவி யிழந்தீரோ ,,
வையகந் தன்னிலிவ் வாழ்வை விடுத்தீரோ ,,
கானகந் தன்னிலே கைவிட்டுச் சென்றீரோ ,,
வானுலகஞ் செல்ல வன்மனங் கொண்டீரோ ,,
என்று-மக்களனைவரும்மண்ணில்புரண்டழுதார் ,,
துன்பப்பட்டுத்தாழந்துண்டையாவரும்கண்டார் ,,
தங்கைகளே இவ் வநியாயம் பாருங்களே ,,
தாழமரமாகத் தந்தையும் மாறினரே ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

என்றுமிகப் புலம்பி ஏந்திழைமார் ஏதுசெய்தார்
சென்றந்த கானகத்தில் சுப்பல்களைச் சேகரித்தார்
காஷ்டந்தனை யடுக்கிக் கனத்ததீ மூட்டலுற்றார்
கோஷ்டமிட்டுபுலம்பிக் கொள்ளிதனை வைக்கலுற்றார்
கொள்ளிவைத்துகுடமுடைத்துகொளுத்தினர்தாழந்துணிடை
மெல்லியர்களேழுபேரும் மேவியே கர்மம் முடித்தார்
குளத்தின் கரைதேடிக் கோதையர்கள் நீராடிக்
களக்கமற்று இருந்தார் கானகந்தனில் கூடிக்
காட்டில் விளையாடுவதும் கனிபறித்துத் தின்னுவதும்
நாட்டை மறந்தேழு நங்கையர்களிருந்திடவும்
இப்படியாக இடரின்றி வாழ்ந்துவர
அப்போ தங்குநடந்த அதிசயந்தனைக்கூற

வசனம்:—அச்சமயத்தில் அக்கானகத்தில் முனிவரின் சாபத்தால் புலியாகமாறிய வங்கதேசத்தரசன் பகலில் தன் சுயரூபமும், இரவில் புலிரூபமுமாக இருக்க ஓர்நாள் பகல் ஏழுபெண்களும் மன்னனிருக்கும் காட்டையடைய, வங்கமன்னன் அப்பெண்களை யழைத்து அவர்களின் விர்த்தாந்தங்களை யறிந்து,

தன் தங்கைகளைப்போல் பாவித்து ஏழு பெண்களுக்கும் ஏழுபர்ணகசாலையமைத்து அதிலிருக்கச்செய்ய, அச்சமயத்தில் பானுகண்டி பட்டணத்தின் அரசனாகிய இராமவர்த்தி வேந்தன் அங்கு வேட்டைக்குவர அங்குவந்த மன்னனைக்கண்டு சம்பாக்ஷித்துப்பர்ணகசாலையிலிருக்கும் மங்கைகளின் விர்த்தாந்த மறிந்து தனது தங்கையின் குமாரத்திகளென அறிந்து தனது நகரத்திற்கு அழைத்து வந்தான்.

பானுகண்டியென்னும் பட்டணத்தைத்தேடி தந்நானத்தான
காணவே சேர்ந்து வளர்ந்து வந்தார்நாடி ,,
தாய் மாமனும் ராம வர்த்தி வேந்தனிடத்தே ,,
வாய்மையுட னிருந்தாரே மனம் வகித்தே ,,
நாளொரு மேனியாய் நங்கையர்கள் வளர்ந்தார் ,,
மீளொணுத் துயர் மீசுரமாய் மறைந்தார் ,,
வளர்ந்து சமைந்தாரே வாலிபமானரே ,,
வாழ்க்கைப் படும்நல்ல வனிதைகளானரே ,,
இராமவர்த்தி மன்னன் மைந்தர்களேழுபேராம் ,,
வீரதீரமுடன் வெற்றியடைந்தவராம் ,,
சூரியவர்த்தனும் சந்திரவர்த்தனென்றும் ,,
பேரும் பாபவர்த்தன் சாபவர்த்தனென்றும் ,,
காமவர்த்தனென்றும் ராமவர்த்தனென்றும் ,,
கர்யவர்த்தனென்றும் கண்ணனவேழுபேராம் ,,
ஏழு புதல்வர்க்கு ஏழுபேர் மங்கைகளை ,,
வாழவே மாங்கல்யம் சூடினு ரவ்வேளை ,,
மக்களெழுவரும் மருமக்களேழுபேரும் ,,
பக்குவமாகவே பாரில் வாழ்ந்தாரவரும் ,,
ஏகபோகமுடன் ஏழுபேரும் வாழ்ந்தார் ,,
சோகமகற்றியே தொல்லுலகை யாண்டார் ,,

வசனம்:—மங்கைகளெழுவரும் தாய் மாமனின் குமாரர்களை மணந்து மனதொருமித்து வாழ்ந்து வரும் நாளில், நவபோஜன் டில்லிபாஷாவுக்கு கிஸ்தி செலுத்தாத காரணத்தால் பூச்சக்ரபுரியை அமானு செய்து நவபோஜனையும் மாணிக்கதேவியையும்

நாட்டை விட்டப்புறப்படுத்த நவபோஜன் தன் நாயகியுடன் கானகத்திலலேந்து கட்டைகளை வெட்டி மனைவியோர் புறமும் அரசன் ஓர்புறமுமாக விறகு விற்றுவர, பானுகண்டி பட்டணத்தில் பாலநாகம் மாள் தன் தமக்கைமார்களுடன் உப்பரிகை மீது:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

ஒன்றாகச்சேர்ந்தாரே உத்தமிகளேழுபேரும்
குன்றாமல்பகடைசாலை கோதையர்கள்வந்தமைந்தார்
அக்காளும் தங்கையரும் ஐந்துரெண்டேழுபேரும்
சொக்கட்டா ஊடலுற்றார் சொகுசா யனைவரும்
மக்களைக் காட்டில்விட்ட மாகொடிய வல்வினையான்
இக்கட்டு நேர்ந்ததென்று எண்ணியவன் விதியால்
ஊரிழந்து நாடிழந்து உள்ளபதியிழந்து
சீரிழந்து பேரிழந்து செல்வசிறப்பிழந்து
விறகோ விறகென்று விற்றுவாரான் நவபோஜன்
பரதேசிக் கோலமுடன் பார்மன்னன் வாரானே
விறகுவிற்கும் சப்தமதை வித்தகிமார் கேட்டாரே
தீரமுள்ள காவலனால் சீக்கிர மழைத்தாரே
என்னவிலை விறகு என்றாளே நாகம்மாள்
உன்னதமாய் மற்றொருத்தி உற்றுக் கவனித்தாள்
அக்காடி அக்காடி அதிசயமாய்த் தோணுதடி
மிக்க இவரைக் கண்டால் மிகவருத்த மாகுதடி
நம்-தந்தையைப்போல் காணுதடி தடமாட்டமாகுதடி
சிந்தைமிக வாடுதடி விந்தையாகத் தோணுதடி

வசனம்:—என்று அனைவரும் ஒன்று சேர்ந்து விறகு விற்பவனை அழைத்துவந்து சகல சங்கதிகளையு மறிந்து, பிறகு, தன் தந்தைக்கு நீராட்டி, ஆடையா பரண மணிவித்து, அகமகிழ்ச்சியுட னிருந்தார்கள், பொழுது அஸ்தமித்ததும் மாணிக்கதேவி அரசன் சொன்ன இடத்தில் வந்துபார்க்க, அங்கு அரசன் இல்லாததால், அன்றிரவு அவ்விடத்திலேயே சயனித் துக்கொள்ள; அன்றிரவு அக்கானகத்தில் புலியாகச்

சாபமடைந்திருந்த வங்கராஜன் மாணிக்கதேவியைத் கிழித்தெறிந்தான், பிறகு நவபோஜன் தன் குமாரத்தினுடனிருக்கும் சமயம் பாலநாகம்மாளின் கணவனுல் பழையபடி பூச்சக்ரப் புரியை மீட்டும், நவபோஜன், மாணிக்கதேவியின் சூடுமருந்திஞல் மடிகிருன், பிறகு ஏழு பெண்களும் இறந்த மன்னனை எடுத்து தகனம் செய்துவிட்டு தனது கணவர்களுடன் வாழ்ந்து வரும்நாளில் பாலநாகம்மாளுக்கு கற்பமேற்பட்டது, கற்பமேற்பட்ட ஐந்தாவதுமாதம் ஏழுபெண்களின் கணவர்களும் கண்டிகோட்டையுத்தத்திற்குப் போக நேர்ந்தது அப்பொழுது இளயவனுகிய கார்யவர்த்தி வேந்தன் தன்மனைவியாகிய பாலநாகம்மாளை நோக்கி:

ஆருயிற் காதலி அன்னமே செந்தேனே தந்தானத்தான
கூறுமென் வார்த்தையை கேட்பாய் மடமானே ,,
கண்டிக்குப் போய்வர கண்ணே விடைதரும் ,,
உண்டுகளித்திங்கு உல்லாசமாயிருப்பாய் ,,
அகுதி பரதேசி யார்வந்த போதிலுமே ,,
பதிலொன்றும் கூறுதே பாவையே ரத்தினமே ,,
உழக்கரிசியும் உப்புபயருடனே ,,
உத்தமியே தந் தனுப்படி சித்திரமே ,,
யார்வந்த போதுமிக் கோட்டைநீ தாண்டாதே ,,
கீர்த்தியுடன் மொழி கண்ணே தவராதே ,,
என்று—சேவைபுரிந்திடும் சேவகனை யழைத்தான் ,,
அண்ணரறுவரும் ஆண்படை சேவகரும் ,,
கண்டிநகர்கோட்டைக் கேகினு ரேழுபேரும் ,,
மன்னர்கள் சென்றபின் மாதமைந்தாச்சுதுபார் ,,
பொன்னைக் கவிழ்ந்தாற்போல் பாலன்பிறந்ததுபார் ,,
பாலநாகம்மாளும் பாலனைபெற்றெடுத்தாள் ,,
பாலமிர்தமூட்டி பக்குவமாய் வளர்த்தாள் ,,

வசனம்:—ஏழுமன்னர்களும் சென்று அங்கு யுத்தம் நீடித்து விடவும், பத்துமாதம் சென்றதும், பூரண சந்திரன் போன்ற ஒரு புத்திரன் பாலநாகம்மாளுக்குப் பிறக்கவும், அக்குழந்தையுடன் மற்ற ஆறுதாய்மார்களும் அதிக சந்தோஷத்துடன் கொஞ்சி விளையாடி வளர்த்து வந்தனர். இவர்கள் இப்படி இருக்க, பானுகண்டி பட்டணத்திற்குமேற்கே வெகுதூரத்தில் நாகள்ளபூடி யென்றொரு பட்டணமுண்டு, அந்நகரில்:

மாயஜாலேந்திர மந்திரங்கற்றவனும் தந்தானத்தான
உபாயமுடன்பல உளவறிந்தவனும் ,,
சாஸ்திர வேதம் சகலமும் கற்றவனும் ,,
பேசப் பதினெட்டுப் பாஷை யுணர்ந்தவனும் ,
மந்திரத்தால் நூறு பெண்கள் சிறையெடுத்தான் ,,
அந்திர மார்க்கமாய் ஆறுகோட்டையமைத்தான் ,,
பதினாறு கோபுரம் பளிங்கு மேடைகளாம் ,,
அடிமையாய்ப் போனது ஆயிரம் பேய்களாம் ,,
வண்ணாரப் பேய்களாம் வழக்காடும் மாமுனியாம் ,,
கின்னாரங் கொட்டிடும் குட்டிச்சாத்தான் ஏவலாம் ,,
கண்ணை உருட்டினால் காடுபற்றி எரியும் ,,
மண்ணையெடுத்தாலும் பொன்னாகவே தெரியும் ,,
ஏழுகட்டுவாசல் ஏகாதிபத்தியமாம் ,,
பாழடைந்த சுனை பக்கமசூதியொன்றாம் ,,
அந்த மசூதியின் அந்தப் புறந்தனிலே ,,
விந்தையுள்ள ஒரு வைரசுனை தனிலே ,,
வாழ்ந்து வந்தானந்த மாயாபக்கிரியாம் ,,
தாழ்ந்த வணிக சுங்கு அவன்மனைவியாம் ,,
அன்னவன் பேர்கேட்டால் எண்டிசையும் நடுங்கும் ,,
அண்டமெல்லா மிவன் அதிசயத்திற் கொடுங்கும் ,,

வசனம்:—இத்தகைய சாமர்த்தியம் வாய்ந்த மாயாபக்கிரியென்பவன் ஒருநாள் தன துயக்ஷணியின் அஞ்சனச்சுவடியை எடுத்து மையிட்டுப்பூலோகத்தின் அதிசயங்களை யெல்லாம் பார்த்து முடிவில் பானு

கண்டி பட்டணத்திலுள்ள பாலநாகம்மாளைக் கண்டு மயங்கி, அளவில்லாத காதல் கொண்டு, தனது மனைவியாகிய வணிக சங்கை யழைத்து:

வந்துநீ பாரடி வணிகசங்கு மானே தந்தானத்தான
இந்திராணிபோன்ற இளங்கொடியைத்தானே ,,
கண்களும் கூசுது காணடி செந்தேனே ,,
காந்தம் போலென்னை இழுக்குதென்செய்வேனே ,,
கட்டழகிதன்னை இக்ஷணங்கொண்டுவாரேன் ,,
வட்டமிட்டுபானு பட்டணமே போறேன் ,,
என்று—காவிகஷாயமும் கபடனிவனணிந்தான் ,,
தாவியே ருத்ராக்ஷ தாவடமே புனைந்தான் ,,
கன்றுமான்தோலைக்கனமுடன்போர்த்தானே ,,
சன்மார்க்கன்போலே ருத்ராக்ஷமணிந்தானே ,,
ஜடைமுடி பூண்டதோர் சன்யாசிபோல் மாறி ,,
நடந்துவாரான் பால நாகம்மாளைத்தேடி ,,
கடையும் கடைவீதி கன்னரை வீதிவிட்டான் ,,
திடமாய்ப் பானுகண்டி பட்டணமே வாரான் ,,
மாது நாகம்மாளின் மாளிகையை யடைந்தான் ,,
வாது செய்ய அங்குக் காவலிருக்கக் கண்டான் ,,
சங்கரா சம்போ சதாசிவாவென்றுரைத்தான் ,,
இங்காருமில்லையோ என்பசி தீர்க்கவென்றான் ,,
கள்ளத்தனத்தினால் கால்தடுமாறினின்றான் ,,
சொல்தடுமாறியே சேவகனை யடைந்தான் ,,

வசனம்:—மாறு ரூபங்கொண்டுவந்த மாயா பக்கிரியானவன் பாலநாகம்மாள் வசிக்கும் மாளிகையின் வாயிற்படியருகில் வந்துநின்று, காவலனை யயக்கி உள்ளே சென்று பிச்சைகேட்கத் தாதியானவள் உழக்கரிசியும் பயரும் உப்பும் காணிக்கையும் ஒரு தாம்பாளத்தில் வைத்து எடுத்து வரவும், அதைக் கண்டு மாயாபக்கிரி கலகலவென நகைத்து இவ்வமுது படிக்கு யார் சொந்த முள்ளவர் அவர்களல்லவோ கொண்டுவந்து கொடுக்க வேண்டும். அதைவிட்டு நீ

கொடுத்தால் யான் ஏற்றுக் கொள்ள முடியாது போடி என்றான். அதைக்கேட்ட தாதியாளவள் கூறுகிறாள்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு.

ஜங்கமரே ஐயாவே சாற்றிடுவேன் கேளுமையா
மங்கையவள் வெளியே வந்திடவும் போகாதையா
என்னஜோலி யானபோதும் இங்குவரலாகாது?
மன்னரிட ஆக்கினையை மறுத்திடலாகாது
தர்மத்திற்கு ஒருவர் தாழ்உண்டோ கூறுமையா
யார்தர்மம் செய்தபோதும் அனுசரிப்பீர் மகாதேவா
என்று-பாங்கியவள் சொன்னமொழி பக்கிரியும் கேட் [டானே
ஓங்கி யுதும்பிகண்ணை யுருட்டியவன் பார்த்தானே
மீசை துடிக்குதுபார் முன்கோபம் ஆகுதுபார்
ரோஷமுடன் விழிகள் நெருப்பு தனலாகுதுபார்
ஆங்காரக்கோபமுடன் ஆர்க்கரித்துஏதுசொல்வான்
போங்காலம் வந்ததோடி பாங்கியரே உங்களுக்குப்
புத்திரப் பேறடைந்த பூரிப்பால் என்றனையே
சற்றும் மறியாத தையல் சதிபாரடியே
அவளைக்கல்லாக்கிடுவேன் அவள்-புத்திரனைக்கொன்றிடு [வேன்
கவலையுற இந்நாட்டைக் கனலாயெரித்திடுவேன்
பாரடி யென்றுசொல்லி பரிக்கெடுத்தான்வெண்ணீ [றை
கூறடி சீக்கிரமாய் கொம்பனைக்கு என்மொழியை
பக்கிரியுரைத்தமொழி பாங்கியரும் கேட்டாளே
மிக்க கவலையுடன் மாது ஓடிவாராளே

வசனம்:—அச்சமயத்தில் பாலநாகம்மாள் தனது பாலனைத் தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டிக்கொண் டிருந்தாள். அச்சமயத்தில் தாதியானவள் ஓடிவந்து ஜங்கமருரைத்தசங்கதிகளைக்கூறவும், அதைக்கேட்ட பாலநாகம்மாள் பயந்து, அந்த அமுது படியை எடுத் துக்கொண்டுபுறப்பட அச்சமயத்தில் தொட்டிலிலிருக் கும் மூன்று மாதக்குழந்தையானது வாய்திறந்து கூறுகின்றது:

## கட்டபொம்மு வர்ணமெட்டு

போகாதே போகாதே என்னைபெற்ற அம்மா என்னைப்பெற்ற
பொல்லாங்கு நேரு மதனுலே தாயே
பொல்லாங்கு நேரு மதனுலே

கண்டாளே கண்டாளே அதிசயத்தை பிள்ளையின் அதிசயத்தை
கேட்டதுமே மனம் தான்தளர்ந்தாள் தாயும்
கேட்டதுமே மனம் தான்தளர்ந்தாள்

மனம் தளர்ந்துமே துணிவுகொண்டாள் தாயும் துணிவுகொண்டாள்
மாயாபக்கிரிக்கு தான் பயந்தாள் அப்போ
மாயாபக்கிரிக்கு தான் பயந்தாள்

ஓடிவந்து மகனை முத்தமிட்டாள் தாயும் முத்தமிட்டாள்
ஒளிந்தாலே சாபங்கள் நேருமென்று உடனே
ஒளிந்தாலே சாபங்கள் நேருமென்று

கபடமில்லாமலே பாலநாகு அம்மன் பாலநாகு
கன்னியவள் முன்னே வந்துநின்ருள் அப்போ
கன்னியவள் முன்னே வந்துநின்ருள்

வசனம்:—உடனே அமுதுபடியை எடுத்துக் கொண்டு மாயாபக்கிரியிடம் வந்தாள். உடனே மாயா பக்கிரி பாலநாகம்மாளைக் கண்டதும் புன்சிரிப்புடன்.

அம்மணி அம்மணி ஆசீர்வாதம் தாயே தந்தானத்தான
அன்புடனே நீ அமுது படைப்பாயே ,,
இந்தாரும்சுவாமி இதைபெற்றுக்கொள்ளுமையா ,,
என்றுசொல்லி நங்கை ஏந்திஞள் இருகையால் ,,
கோட்டுக்கு அப்புறம் நின்று கொடுத்தாளே ,,
ஏற்றுக்கொள்ளேனதை எடுத்துப்போ தாயாரே ,,
வேற்றுமை வைபாமல் வந்து அமுதிடுவாய் ,,
கீர்த்தியுற்றேவாழ்ந்துசெல்வரைப்பெற்றிடுவாய் ,,
நயவஞ்சகன் மொழி நாகம்மாள் கேட்டாளே ,,
தயங்காமலே கோட்டை தாண்டியே வந்தாளே ,,
கணவனுரைத்ததைக் கன்னிமறந்தாளே ,,
குணமது மாறியே கோதையும் நின்ருளே ,,

அழுதுபடி தனை ஆண்டியிடம் கொடுத்தாள் தந்தானத்தான
தொழுது அவனிட பாதம் வணங்கிநின்றாள் ,,
விபூதி யெடுத்தவன் நெற்றியி விட்டானே ,,
நிபுணன்போல் வாயுற வாழ்த்திட லுற்றானே ,,
வெள்ளிப்பிரம்பதை வஞ்சகன் கைபிடித்தான் ,,
கள்ளநெஞ்சனவன் கன்னிதலையில்வைத்தான் ,,
தலையில் வைத்தவுடன் திக்கென்றெரிந்தாளே ,,
நிலைகுலைய வெந்து நீராகபோனாளே ,,
நீரான சாம்பலை வாரியெடுத்தானே ,,
போகவே ஒரு நாயாகச் செய்தானே ,,
நாயான நாகம்மாள் நங்கை புலம்புகிறாள் ,,
ஓயாக்கவலையை உள்ளத்தில் கொண்டழுதாள் ,
கத்திக்கத்திநாயும் சுற்றித்திரியுதுபார் ,,
சித்தந்துடித்தங்கு பாலனை நக்குதுபார் ,,
பெற்றமகன் தனைச் சுற்றியலையுதுபார் ,,
அற்றதாசை யெனக் கத்திப்புலம்புதுபார் ,,
அரண்மனைக்குள்ளோடி அலைந்துதிரியுதுபார் ,,
பிறந்த மகனிடம் புரண்டு கதறுதுபார் ,,
ஆவுரேபைரியென் றார்ப்பரித்து அழைத்தான் ,,
தவுட்டுரொட்டிதனைச்சதிகாரன்வைக்கலுற்றான் ,,
பால்ரொட்டி தன்னையும் நாயது தின்னாமல் ,,
நாலாபக்கத்திலும் சுற்றுது போகாமல் ,,
கழுத்தில் கயிறுமாட்டிக் கட்டியிழுத்துவாரான் ,,
பழுதின்றி வீட்டின் வாயிற்படியடைந்தான் ,,

வசனம்:—அரண்மனைக் காவலன் நாயைக் கண்டதும் ஐயா! பண்டாரமே, பிச்சைக்குச் சென்ற நீ திருட்டுத்தனமாய் எங்கள் வீட்டுப் [illegible] அழைத்தாபோகின்றாய், இதைவிடமுடியாது என்று கூற, அதற்குப் பக்கிரி விபூதியைஎடுத்து அவன்மேல் தூவ காவலன் பைத்தியங்கொண்டு காட்டிற் கோடிப் போனான் உடனே பக்கிரி நாயையழைத்துக் கொண்டு தன்நாட்டிற்குச் சமீபத்திலிருக்கும்

மௌலாவிபேட்டையில் ஓர் ஆலவிருட்சத்தின் அடியில் வந்துநின்று நாயின்மீது பிரம்பைவைக்க, நாயானது பாலநாகம்மாளாக உருவமானது. பக்கிரி பாலநாகம்மாளைக்கண்டதும் கலகலவென்று நகைத்துக் கூறுகிறான்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

பார்த்தாயோடி பெண்ணணங்கே பட்டணத்தின் சீர்வடிவை
நேர்த்தியுள்ள கோபுரங்கள் நிற்குமோர் அதிசயத்தை
மாடமாளிகைகளும் மரகதத்தால் மேடைகளும்
ஓடைகளும் மண்டபமும் உலவிட நதிவளமும்
ஏழுசுற்று மதிலழகும் இதன்நடுவே மாளிகையும்
சூழும் பூங்காவனமும் சோலைகளும் வாவிகளும்
இத்தனையு மிருக்க என்னகுறை கூறுமடி
சித்தந் துடிக்குதடி சேரமனம் சோருதடி
யாரோ எவரோவென்று வென்றனை நினையாதே
பாரோரெல்லாம் புகழும் பக்கிரியென்பேர்மாதே
மந்திரத்தில் வல்லவண்டி மாயத்தில் நிபுணனடி
இந்த்ரஜாலம் மந்த்ரஜாலம் எல்லாமுணர்ந்தவண்டி
கண்திறந்து பார்த்தேனானால் காடுபுகை கிளம்பும்
உன்னையுள் உள்ளவரை உலக முனைப்புகழும்
நினைத்தால் உயிர்கொடுப்பேன் பகைத்தாலெரித்திடுவேன்
துணையாகப்பேய்பூதம் தோணவேஏவல்கொள்வேன்
பழுதில்லா வென்பெயரைப் பாருலகில் கேட்டாலும்
அழுதபிள்ளை வாய்மூடும் அண்டங்கிடுகிடென்னும்
எவ்வளவோ பக்கிரியும் எடுத்துரைத்தான் மாதினுக்கு
அவ்வளவும் அசட்டைசெய்து அரனைவணங்கி நின்றாள்

வசனம்:—பிறகு நாகம்மாள் மனதை ஒருவாறு தேற்றி இவனிடமிருந்து நாம் தப்பமுடியாது. ஆனால் இதற்கு ஒரு சூட்சி செய்ய வேண்டுமென்று யோசித்துப் பக்கிரியை நோக்கி கூறுகிறாள்.

ஐயனே பக்கிரி அடியேன்சொல் கேளுமையா தந்தானத்தான
உன்மையல் தீர்ந்திட மனது துணிந்தேனையா ,,
ஆனலொருசேதி அறைகுவேன் கேட்டிடுவீர் ,,
வீரலக்ஷிமியின் விரதமொன்றுண்டறிவீர் ,,
பன்னிரண்டாண்டுவரைப் பாரவிரத முண்டு ,,
கண்கொண்டுபார்த்தாலே கனலாயெரிவீரின்று ,,
மாளிகையொன்று தனியாயிருக்கவேணும் ,,
ஆள்படையாரு மணுகாதிருக்க வேணும் ,,
விரதமுடிந்திடும் வரையிலும் நீருமங்கே ,,
வரப்படாது இங்கே வழுத்துவேன் கேளுமிங்கே ,,
பாவையுரைமொழி பக்கிரிகேட்டானே ,,
பூவையரின் மொழி நம்பிடலானனே ,,
அப்படியே உனக் கமைத்துத்தாரேனடி ,,
இப்பொழுதே நகர்க் கேகுவோம் வாருமடி ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

என்றுமே பக்கிரியும் எடுத்தானே வெண்ணீறு
துன்மார்க்கன் மங்கையின்மேல் தூவினன் அப்பொழுது
திக்கென்றெரிந்தாளே தேன்மொழியாள் நாகம்மாள்
பக்கிரி அச்சாம்பல்தனைப் பதனம்செய்தான்சிமிளதனில்
சிமிளதனிலடைத்தான் ஜோளிதனில் போட்டானே
அமைதியுடன் தனியாய் அரண்மனைக்குவந்தானே
பக்கிரி வந்ததைப் பார்த்தாள் வணிகசங்கு
கக்கிலி கொட்டியே குலுங்கநகைத்தாளங்கு
ஆசைகொண்ட மாதரசி யானையின்மேல் வாராளோ
மோசக்காரன் வைத்தஎண்ணம் முழுதும் பொய்யாச்சுதோ
மனக்கோட்டைகட்டிய மார்க்கமெல்லாம்பொய்யாச்சோ
வினைசூழ வெட்கங்கொண்டு வெறுமனே வரலாச்சோ
என்று நகைத்தாளே இளங்கொடியவன்தேவி
புன்னகைபுரிந்து சொல்வான் பக்கிரிபடுபாவி
ஆத்தரி பான்ச்சோது யாரையடி கேலிசெய்தாய்
தாத்தரி இங்கிருந்து தூரநீ போடிநங்காள்
நான்போற காரியமும் நடவாமல் போகுமோடி
ஜாண்பிள்ளையானலும் ஆண்பிள்ளையல்லவோடி

என்று—சிரித்து மீசைமுறுக்கி சிமிளதைக் கையிலெடுத்தான்
உரித்தமுள்ள என்மனைவி உத்தமியை பாருமென்றான்
பாருமென்று சாம்பலதை பாவையர்முன் கீழ்போட்டான்
சீருள்ள பிரம்பாலே சிறப்புடன் தடவலுற்றான்
தட்டபிரம்பாலே தையலெழுந்திருந்தாள்
கட்டழகி நாகம்மாள் கபடமாய்த் தலைகுனிந்தாள்
கண்டாள் வணிகசங்கு கைமுறித்து மனம்பதறி
சண்டாள பாவிநீதான் சாவதற்கோ எனைதூரி
அருந்ததிக்கு ஒப்பான அரிவையரை யழைத்துவந்தாய்
பொருந்தாதடா உனக்குப் போயிவளை விட்டுவாராய்
நீதியான வார்த்தையெல்லாம் நிர்மூடன் கேட்டானே
மோதியரைந்தானே முன்தவடைப் பல்லுதிர
எட்டியுதைத்தானே ஈரல் குலைகலங்க
மட்டியந்தப் பக்கிரியும் மம்மதையா யார்ப்பரிக்க
நாகம்மாளை யழைத்து நாசகாலன் வாரானே
மோகமாய் மசூதிதனில் மிகவடக்கம் செய்தானே

வசனம்:—பக்கிரியானவன் நாகம்மாளை மசூதியில் அடக்கம்செய்து காவலர்களால் வேண்டிய சம்ரக்ஷணை புரிந்துவரும் சமயம், கண்டி கோட்டைக்குச் சென்ற பாலநாகம்மாளின் கொழுநர்களும் புருஷனும், இதைக் குடிகளால் விகித மூலமறிந்து, உடனே வேந்தர்கள் பக்கிரியின்மீது படையெடுத்து மௌலாவி பட்டணம் நாகள்ள பூடிக்குவந்து யுத்த முரசறைய வும், இதைக்கேட்ட பக்கிரி இவ்வரசர்கள் முன்னே வரவும்.

கண்டவுடன்மிகக் காந்தாளங்கொண்டாரே தந்தானத்தான
அண்டம் நடுங்கிட அதம் புரிந்தாரே ,,
பொன்மதில்கோபுரம் பொடியாகச்செய்தாரே ,,
துன்மார்கன்சேனையைத் துணித்துமடித்தாரே ,,
மடிந்தசேனைகளைப் பக்கிரி கண்டானே ,,
கடுக விபூதியைக் கடிந்து எறிந்தானே ,,
வெண்ணீறுபட்டதும் விரைந்து எரிந்ததுபார் ,,

கண்ணுரக்கண்டிடக் கர்ஜித்து நின்றதுபார் தந்தானத்தான
கர்ஜித்து நின்றேரைக் கத்தியால் வெட்டிக்கொன்ருர் ,,
பக்கிரி கண்டிதைப் பக்ஷமாயேதுசொல்வான் ,,

**வசனம்:**—அரசர்களே! என் சேனைகளை யெல்லாம் கொன்றுவிட்டீர்கள். இனிஜெயம் உங்களுடையதுதான். ஆனல், உங்களின் பராக்கிரமத்தை என்னிடம் சற்றுக்காட்டுங்கள் பார்க்கலாம் என்று மாயா பக்கிரிகூற மன்னர் கோபமீறி:

அண்டம்நடுங்கிகோபமாய்எழுந்தார் தந்தானத்தான
கொண்ட கவலையால் கொல்லமனந்துணிந்தார் ,,
கோடான அஸ்திரம் கேடன்மீது எறிந்தார் ,,
மூடன் மடிந்திட மன்னர்கள் பாணமெய்தார் ,,
வந்த பாணங்களை வலதுகையால் பிடித்தான் ,,
மந்திர சக்தியால் மாயமாக மறைந்தான் ,,
உங்களின் வல்லமை காட்டினீர் வேந்தர்களே ,,
என்றனின் சௌரியம் இப்போதே பாருங்களே ,,
என்று சொல்லி மாயமந்திரக் கோலெடுத்தான் ,,
நின்ற யானைகளை நிலைக்கல்லா யாக்கலுற்ருன் ,,
குதிரைகளையெல்லாம் குன்றுகளாக்கலுற்ருன் ,,
கதித்துஒட்டைகளைக்கற்பாறையாகச்செய்தான் ,,
போர்வீரர்களைப்பதுமைபோல்நிற்கச்செய்தான் ,,
நேர்த்தியாய்கூடாரம் நிபுணனெரியசெய்தான் ,,
ஏழுபேர் மன்னரை இனிதுடன் கல்லாக்கிப் ,,
பாழான பக்கிரி வாரான் மனைநோக்கி ,,

**வசனம்:**—மாயாபக்கிரியானவன் அரண்மனைக்கு வந்து நாகம்மாளைக்கண்டு, ஒ பெண்ணே! பார்த்தனையா உன் கணவனும், மற்ற ஆறுகொழுநர்களும் எக்கதியானுர்கள். இனியாவது எனக்கொரு முத்தங்கொடு எனக்கூற நாகம்மாள் மனந்திகைத்து இனிநம்மை யார்வந்து சிறைமீட்கப்போகின்றனர், சரி பார்க்கலாம், என்கதி என்னவான போதிலும் இம்மடையனுடைய எண்ணத்தைப் பின்னமாக்கு

கிறேன் என. தன்மனதைத் தேற்றிக்கொண்டு ஐயா! பக்கிரி, நான் சொன்ன தவணை தவருமல், என்னிடம் ஏதாவது காதல் மொழியாடினல், என் விரத சக்தியினல் திக்கென்று பற்றி எரிகுவாய் எனக்கூற மாயாபக்கிரி மனது திடுக்கிட்டுச் சரியென மதித்துப் போய்விட்டான்.

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

இப்படியாகவே இவரிருக்கும் நாளையிலே
செப்புவேன் மற்றுமுள்ள சேதியை இவ்வேளையிலே
பானுகண்டிபட்டணத்தில் பாலன் தனைவிடுத்துப்
போனபின் நாகம்மாள் புத்திரன் தனையெடுத்துத்
தமக்கைகள் ஆறுபேரும் தாயில்லாப் பிள்ளை தனைத்
தமதுமகன்போலே தையலர் வளர்த்துவாரார்
ஆராட்டிச் சீராட்டி அன்புடனே பாலூட்டிச்
சீராய் வளர்த்துவாரார் தன்மகன்போல் பாராட்டி
மன்னர்களுக் குள்லான மாய்கை தெரிந்திருந்தும்
அன்புள்ள மகனாலே அனைத்து மறந்தாரே
பாலவர்த்தி வேந்தனென்று பாலனுக்குபேருமிட்டார்
சீலமுடனேச் வளர்த்து சிறப்பணிகள் பூட்டலுற்றார்
பாங்குடன் ஐந்தாம்வயதில் பாலனைபள்ளியில்வைத்தா
சோங்காமல்கல்வி தனைச் சிறப்புடனேதிவைத்தார் [ர்
தெலுங்கு தமிழ்கன்னடம் தேட்டமாய் மராட்டியமும்
கலக்கமின்றி பாஷைபலப் கற்றனே பாலகனும்
வில்வித்தை மல்யுத்தம் வெற்றிபெறக் கற்றனே
தொல்லையின்றித் தோழருடன் விளையாடிவருவானே
ஓடி உடானடித்து உயரக் கிளம்புவதும்
கூடியே பாலருடன் குந்தங்க ளாடுவதும்
திடகாத்திரனுகத் தேர்ந்தெடுக்கப் பட்டானே
தொடர்ந்து பத்தாம் வயதில் துணைவீரனுனே

வசனம்:—இவ்விதம் பாலபார்த்திவேந்தன் தனது மூத்ததாய்மார்களிடம் வளர்ந்துவருங்காலத்தில், ஒருநாள் தன்தோழர்களுடன் வில்லம்பு

கொண்டு விளையாடிவரும் சமயம், அந்நகரிலுள்ள சிலபெண்கள் குளத்திற்குச் சென்று ஜலமெடுத்துச் செல்லும் சமயம், பாலவர்த்திவேந்தன் கேளிக்கையாகக் குறிபார்த்து அக்குடத்தை அம்பினல் எய்து உடைத்துவிட, பானையை யிழந்த அம்மாது பாலவார்த்திவேந்தனைநோக்கிக் கூறுகிருள்:

அடப்பாவி சண்டாளா அநீதம்செய்யலாமா தந்தானத்தான
குடத்தை யுடைத்துநீ குலுங்க நகைக்கலாமா ,,
தாயில்லாபிள்ளைப் தறுதலையென்பாரே ,,
நியாய மதுதனை நிகழ்த்திக் காட்டினயே ,,
அன்னை தந்தையில்லா அரட்டைப் பயலேயடா ,,
என்றன் குடத்தை யுடைத்தது நீதியோடா ,,
பாவை யுரைத்ததைப் பாலனும் கேட்டானே ,,
ஆவியுருகிட அசைவற்று நின்ருனே ,,
ஓட்டமா யோடியே வீட்டிற்கு வந்தானே ,,
வாட்டமாய்த்தாய்மாரை வணங்கியேநின்ருனே ,,
வணங்கிய மைந்தனை வாரி எடுத்தாரே ,,
மனங்கலங்கிவந்த மார்க்கங் கூறென்ருரே ,,
என்றன் தாய்தந்தையும் எங்கே யுரையுமம்மா ,,
சிந்தை கலங்குது சீக்கிரம் சொல்லுமம்மா ,,
தந்தைதாயில்லாத தறுதலையென்றுசொல்ல ,,
அந்தரங்கமென்ன அதனை யுரைப்பீர்மெள்ளச் ,,
சொன்னலே யாச்சுது அல்லாவிடில் தாயே ,,
என்னுவியை இங்கே விடுவேனறிவாயே ,,
வாயாரக் கூறியே வாளாயுதம் எடுத்தான் ,,
தாயாரெங்கேசொல்லும்தயங்குதென்னுள்ளமென்ருன் ,,

வசனம்:—இதைக்கேட்ட சூரிய நாகம்மாள் மனது கலங்கி மைந்தனை நோக்கித் தன் தாயின் வரலாறுகளையும், தந்தையர்கள் இல்லாத சமயம் பக்கிரிதன்தாயைக் கவர்ந்ததையும், அக்காரணத்தினல் தன் தந்தையர்கள் பக்கிரியினிடம்யுத்தம் புரிந்து

கல்லாகப் போனதையும் தெரிவிக்க, இதனைக்கேட்ட பாலன், கோபா வேசத்தினுல் தன்மூத்ததாய்மார் களை நோக்கித்:

உத்தரவுதாரும்உத்தமத் தாய்மாரே தந்தானத்தான
இத்ததியே சென்று வந்திடுவேன் பாரே ,,
பொல்லாதமூர்க்கனைக் கொல்லாமல்விடுவேனே ,,
தொல்லையுற்றதாயை மீட்காமற் போவேனே ,,
புலிக்குப்பிறந்தயான் பூனையாய்ப் போவேனே ,,
தழைக்கும் சந்த்ரகுலம் தடமாடச்செய்வேனே ,
பாலனுரைத்ததைப் பாவையர் கேட்டாரே ,
ஓலமிட்டழுது உள்ளங் கொதித்தாரே ,,

வசனம்:—அப்பா! நீ போகவேண்டாம். அச் சண்டாளபக்கிரியோ, மந்திரத்தில் சிறந்தவன், மகா கொடிய பாதகன், வல்லமையில் சிறந்த உன் தந்தை மார்களைக் கல்லாக நிற்கச்செய்தானென்றால், நீ அவனுக்குத் துரும்புக்குச் சமானமாகும், என்று எவ் வளவோ புத்திமதிகளைக் கூறியும் கேட்காமல், தாயே! என்னை அவன் கொல்லமுடியாது. யான் தெய்வபக்தி யில் சிறந்தவன், தவிர அவனை மந்திர வித்தையால் ஜெயிக்கமுடியாமற்போயினும் யான் தந்திரமாக அவனை ஜெயித்து வருகிறேன்; ஆனால் இதோபாருங் கள் இந்தப் புஷ்பச் செடியானதை யான் உங்களுக்கு அடையாளமாக வைக்கிறேன். எனக்கு அங்கு ஏதா வது அபாயம் நேரிடில் இச்செடியானது வாடிப் போகும், என்று கூறி உத்தரவுபெற்று,

நல்லதங்காள் கதை அம்மானை மெட்டு

அஸ்வத்தின் மீதேறி அரும்பாலன் வாரானே
விஸ்வரூபங்கொண்டவன்போல் வெகுகோபங்கொண்டானே
பாராசாரி வெண்புரவி பறக்குதுபார் வேகமுடன்
வீராவேசத்துடனே வேகமுடன் வாரான்
காடுமாலைதாண்டி கானுறுபொய்கைவிட்டான்

நாடியோர்பட்டணத்தை நற்பாலன்கண்டுவிட்டான்
அஸ்வமதை நிறுத்தி அங்கே யிறங்கலுற்ருன்
பக்ஷமுள்ள ஆலமரம் படர்ந்திருக்கக் காணலுற்ருன்
வந்தகளையாலே வகைதப்பி மூர்ச்சையானுன்
மைந்தன் களைத்திடவே மாநாகன் வந்ததுபார்
அன்று வரங்கொடுத்த அன்புள்ள நாகேந்திரன்
இன்று இதையறிந்து இடைஞ்சலைக் காக்கவேதான்

வசனம்:—பாலவர்த்திவேந்தன் ஆலமரத்தடியில் ஆயாசத்துடன் சயனித்துக்கொள்ளவும், அன்று லக்ஷிமிதேவிக்குப் புத்திரபாக்கியமளித்த நாகேந்திரனுது ஓடோடியும்வந்து பாலனுக்கு வெய்யல் படாமல் தனது படத்தினுல் நிழல்கொடுத்திருக்கச் சற்றுநேரத்திற்கெல்லாம் பாலன் கண்விழித்துப்பார்த்து பாம்பென் றுணர்ந்து திடுக்கிட்டெழுந்து தன்வாளை யுருவிக்கொண்டு அதைக் கொல்லப்போகவும், உடனே நாகன் தனது வரலாற்றை யுரைத்து, பாலனை நோக்கி,

பேரனே அஞ்சாதே போரில்ஜெயம்பெறுவாய் தந்தானத்தான
ஆரவாரமாயுன் அன்னைதனை மீட்பாய் ,,
இனி-பக்கிரி மந்திரம் உன்னிடம் செல்லாது ,,
மிக்க உன்தாய் சிறை மீட்பாய் நீதப்பாது ,,
இராஜ வசியமிக் கல்லையடக்கிக் கொண்டால் ,,
யாருமுனைக் கண்டால் அச்சமிக வடைவார் ,,
என்று-வாயிலிருந்தொரு வைரக்கல்லையெடுத்து ,,
சேயனிடந்தந்து சென்றதாசிர் வதித்து ,,
வரம்பெற்றுவாரானே வல்லவன்பாலவர்த்தன் ,,
மறுதேசம் வந்தானே மாட்சிமிகுந்த மைந்தன் ,,

கட்டபொம்மு வர்ண மெட்டு

வரம்தந்த நாகனின் வைரக்கல்லை பாலன் வைரக்கல்லை
வாங்கிய வீரமுடனெங்குவாரான் பாலன்
வாங்கிய வீரமுடனெங்குவாரான்

| | | |
|---|---|---|
| புலிவேந்தன் பட்டணம் தானடைந்தான் | பாலன் | தானடைந்தான் |
| புரிந்தான் அவ்வூரு சேதிதன்னை | பாலன் | |
| புரிந்தான் அவ்வூரு சேதிதன்னை | | |
| தாயாரை நோக்கித் தவம் புரிந்தான் | பாலன் | தவம்புரிந்தான் |
| தற்காக்க வேணுமென்றே துணிந்தான் | பாலன் | |
| தற்காக்க வேணுமென்றே துணிந்தான் | | |
| கத்தியைக் கையிலே தான் பிடித்து | பாலன் | தான்பிடித்து |
| களிப்புடன் கானகம் தான்சேர்ந்தான் | பாலன் | |
| களிப்புடன் கானகம் தான்சேர்ந்தான் | | |
| கண்டானே கண்டானே அதிசயத்தைப் | பாலன் | அதிசயத்தை |
| கனகோபம் மூண்டது கண்டவுடன் | பாலன் | |
| கனகோபம் மூண்டது கண்டவுடன் | | |
| ஓங்கியே புலியின்மேல் பாய்ந்துவிட்டான் | பாலன் | பாய்ந்துவிட்டான் |
| தாங்கியே இருதுண்டாய்ச் செய்துவிட்டான் | பாலன் | |
| தாங்கியே இருதுண்டாய்ச் செய்துவிட்டான் | | |
| அவ்வூர் அரசனும் சேதிகண்டான் | உடனே | சேதிகண்டான் |
| அக்ஷணமே பாலனைக் கொண்டுவந்தார் | உடனே | |
| அக்ஷணமே பாலனைக் கொண்டுவந்தார் | | |
| பாலனைக் கண்டதும் புலிவேந்தன் | எழுந்து | புலிவேந்தன் |
| பார்த்துக் களிப்புற்று ஏதுசொல்வான் | எழுந்து | |
| பார்த்துக் களிப்புற்று ஏதுசொல்வான் | | |
| கர்ஜித்த புலிதனைக் கொன்றதாலே | அய்யா | கொன்றதாலே |
| கன்னிப்பெண் சுபத்ராவை மணக்கவேணும் | அய்யா | |
| கன்னிப்பெண் சுபத்ராவை மணக்கவேணும் | | |
| தாயைமீட்டியே நான் வந்தவுடன் | அரசே | வந்தவுடன் |
| தடையில்லாமே மணம் செய்துகொள்வேன் | அரசே | |
| தடையில்லாமே மணம் செய்துகொள்வேன் | | |

**வசனம்:**—பாலவர்த்தி வேந்தன் புலிவேந்தனின் பட்டணம்வந்து புலியைக்கொன்று, அவ்வேந்தனின் பெண்ணாகியசுபத்திராதேவியை, தாயைச்சிறைமீட்டு வரும்போது விவாகம் செய்துகொள்வதாய் உறுதி

யளித்து, அங்கிருந்து கிளிப்பட்டணம் வந்து அரசனுக்குள்ள இராஜகட்டியை நாகேந்திரன் அளித்த வைரத்தினுல் அதைச் சொஸ்தப்படுத்தி அம்மன்னனின் மகளையும் தன் தாயையும் மீட்டுக்கொண்டு வரும் சமயம் விவாகம் செய்து கொள்வதாய்ச் சம்மதித்து, நாகள்ள பூடியென்னும் நகரையடைந்து:

சுந்தர பாலகன் சுற்றுமுற்றும் பார்த்தான் தந்தானத்தான
விந்தைகளைக்கண்டு வீரன் மனமார்ந்தான் ,,
நாகள்ள பூடியை நலமுடன் சுற்றிவந்தான் ,,
கோபங்கொண்டே தாயைத் தேடித்தேடியலைந்தான் ,,
நந்தவனங்களும் நதிக்கரைகளிலும் ,,
விந்தைசேர் கோபுரம் உயர்ந்த மதில்களும் ,,
ஏழடுக்கு மாடி இரும்புகதவுகளும் ,,
சூழும்மசூதியும்ஜனையொன்றுதோன்றுவதும் ,,

வசனம்:—பாலவர்த்தி வேந்தனுனவன் அந்த நகர்முழுதும் சுற்றிவந்தும் தன் தாய் இருக்கும் இடத்தை யறியாமல் ஆயாசமடைந்து வருகையில், மாயாபக்கிரியின் மனைக்குப் புஷ்பம் தொடுத்துத்தரும் ஓர் ஔவக்கிழவியின் வீட்டைக் கண்டான். அங்கு சென்று, பாட்டி கொஞ்சம் தாகத்திற்கு ஜலம் கொடு என்று தாகம்அருந்தி அவள் மனையில் தான் திக்கற்றவன்போல் நடித்து அங்கு தங்கலானுன். நாள்போகப் போகப் பாலன் அக்கிழவிக்குச் சொந்தமான பேரன் போல் அபிநயித்துவந்தான்.

பாட்டிப்பாட்டியென்று பாலனிருந்தானே தந்தானத்தான
பக்கிரியின் பல சூழ்ச்சியுணர்ந்தானே ,,
சூக்ஷமுடன் பல புஷ்பம் தொடுத்திடுவான் ,,
மாட்சியுடன் அதைத் தந்து அனுப்பிடுவான் ,,
கிழவியுடனவன் அரண்மனைக்கும் போவான் ,,
பழக்கமுள்ளவன்போல்பக்கிரியைக்காண்பான் ,,
பக்கிரியும் சிறு பாலனைக் கண்டவுடன் ,,

மிக்கபுகழுடன்வாரியணைத்திடுவான் தந்தானத்தான
தன்வீடுபோலவே தாட்டிகமாய் வருவான் ,,
அன்புடன் பக்கிரி அண்டையிலே இருப்பான் ,,

வசனம்:—பாலவர்த்தி ராஜனென்னும் சிறுவன் மாயாபக்கிரியிடம் அதிக சந்தோஷமுடன் கபடமற்றவன்போல் நடித்து வரவும், ஒருநாள் தான் மாலை தொடுக்கும் சமயம் தன் கரத்திலிருக்கும் கணையாழி மோதிரத்தை அம்மாலையில் வைத்துக் கிழவியை யறியாமல் வைத்துக் கொடுத்தனுப்பவும், அம்மாலையை நாகம்மாளிடம் கிழவி சேர்ப்பிக்கவும், அதைக்கண்ட நாகம்மாள் கோபத்துடன் வாங்கி வீசியெறியவும், அதிலிருந்த கணையாழி கீழேவிழ அதைப் பாலநாகம்மாள் கண்டு திடுக்கிட்டு அம்மோதிரத்தை கையிலெடுத்துக் கொண்டு புலம்புகின்றாள்:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

ஐயையோ என்மகனே அறிவிற் சிறந்தவனே
வையகந்தன்னிலுன்னை விட்டுப்பிரிந்தேனே
அன்றுகண்டேனுன்முகத்தைஇன்றுகண்டேன்மோதிரத்தைச்
சண்டாளனின்சதியால்விட்டுவந்தேன்ராஜ்ஜியத்தை
என்று-கரத்திலெடுத்தபோதேகனகஸ்தனம்பால்
சுரக்குது பாலாமிர்தம் சுந்தரிமனந்திகைக்கும் [சுரக்கும்
எத்தனையோ மன்னர்களை இப்பாவி கொன்றானே
சித்துகளை யறிந்த சண்டாளனிவன்தானே
உன்றனின் தந்தையர்கள் உருமாறி நின்றாரே
மைந்தா உனைவதைக்க தாய்மார்களனுப்பினாரோ
பாலனென்று பாரானே படுபாவிச் சண்டாளன்
ஜாலவித்தை காட்டியுன்னை ஜல்தியில் ஏமாற்றிடு
கல்லாக்கிமண்ணுக்கிக் கனலாயெரித்திடுவான் [வான்
பொல்லாத பாவியுன்னைப் பிடித்துச்சிறையிடுவான்
நான்முன் செய்தவினையால் அகப்பட்டேனிவனிடத்
வீணுக்கேன்நீவந்தாய் வேந்தனே இவ்விடத்தில் [தில்
தாய்க்கும்மைந்தனுக்கும் தலையெழுத்துஒன்றாச்சோ

சேயாக நீபிறந்து சிறுமைபட நாளாச்சோ
என்று-மௌனமாயிருந்தாளே மங்கையருமப்போது
ஔவையார் விடைபெற்று அகன்றாளே யப்போது

வசனம்:—ஔவைக் கிழவியானவள் தன் வீட்டிற்கு வந்து பாலனிடம், பக்கிரியின் வீட்டில் நடந்த சங்கதிகளை யெல்லாம் கூறினாள், மறுதினம் காலையில் எழுந்ததும் பாலன் மாயாபக்கிரியின் அரண்மனைக்கு வரவும், அங்கு மாயாபக்கிரி அமர்ந்திருக்கக்கண்டு சந்தோஷமாகப்பேசி, யான் தங்களின் அரண்மனை முற்றும் சுற்றிப்பார்த்து வரவேண்டும் எனக்கூறவும். அதற்கு பக்கிரி, அப்பா மைந்தா! அரண்மனைக்குள் நீதனிமையாக போகப்படாது, என் அரண்மனைக்குள் எங்கு பார்த்தாலும் பேய் பிசாசுகளும், மாயரூபங்களும் தோன்றும், அதுவுமல்லாமல் பானுகண்டி பட்டணத்திலிருந்து, பாலநாகம்மாள் என்னும் ஓர் பெண்மணியை அழைத்துவந்து, என் விருப்பத்திற்கு சம்மதியாததால் அன்னவளைச் சிறையில் வைத்திருக்கின்றேன். ஆதலால் அங்கு யாரும் செல்லலாகாது, என்றுசொல்ல அதற்கு பாலன் அதற்குத் தகுந்தபடி அவனுக்கு ஏதேதோ தந்திரங்களை யுரைத்து, அரண்மனையின் கதவுகள் திறக்க மந்திரங்களை அவனால் தெரிந்து உள்ளே சென்று:

அங்கங்குஅற்புத காட்சியைக்கண்டுவாரான் தந்தானத்தான
தங்காமலெங்குமே தன்தாயைத் தேடிவாரான் ,,
ஜனனக்குள்புகுந்து சுற்றுமுற்றும்பார்த்தான் ,,
கனத்துக்கதும்பிடும்கணப்பேய்களைமாய்த்தான் ,,
தனித்திருக்கும் பெற்ற தாய்தனைக்கண்டானே ,,
கனிந்தருகிற் சென்று கட்டியழுதானே ,,
நற்றவபாலனை நாகம்மாள் கண்டாளே ,,

உற்ற விஷயத்தை ஓதவறிந்தாளே ,,
அருந்தவத்தாலீன்ற அன்புள்ள என்மகனே ,,
வருகலாமோ இங்கு வல்லவனே சுதனே ,,
என்னைச் சிறைமீட்க உன்றனு லாகுமோடா ,
தந்தையரேழுபேர் தனித்துத்கல்லானுரோடா ,,
எத்தனையோ மன்னர் இவனுல் மடிந்தாரோடா ,,
குத்துக்கல்லாய்செய்து கோரியில்வைத்தானடா ,,
மந்திரங்கள் கற்ற மாயகாரனுச்சே ,,
என்றனைப்போல் வெகுபேர்கள் சிறையாச்சே ,,
தாயில்லை யென்று மனது வருந்தாதே ,,
மாயவஞ்சனிடம் மாண்டு நீபோகாதே ,,
நாட்டை யடைந்துநீ ராஜ்ஜியத்தை யாள்வாய் ,,
மேட்டிமையாய் மணி மகுடஞ்சூடி வாழ்வாய் ,,
நானும் சிலநாளில் மாண்டுமடிவேனடா ,,
காணும்படியங்கு கர்மம் முடிப்பாயடா ,,
பாலநாகுரைத்ததைப் பாலனும் கேட்டானே ,,
காலருத்திரன்போல்கடுங்கோபங்கொண்டானே ,,
சந்திரகுலத்தில் மைந்தனுகப் பிறந்து ,,
முந்திவைத்தகாலைக் பிந்திவைப்பதேது ,,
மாதாவின்கஷ்டத்தை மனதாரக்கண்டிருந்தும் ,,
பூதலமாளவோ புத்தியுரைத்தாய் நீயும் ,,
மீட்டாலும் உன்றனை யான்சிறைமீட்டிடுவேன் ,,
மாண்டாலும் அன்னவன் கரத்தாலேமாண்டிடுவேன் ,,
என்று சீறியேநின்ருனேசிறுத்தைபுலிபோலே ,,
கூறியே வாளேந்திக் கோபமாயவ்வேளை ,,

வசனம்:—நாகம்மாள் கூறியதைக்கேட்ட பாலவர்த்திமன்னன் தாயைப்பணிந்து கூறுகிருன்: ராஜவம்சத்தில் பிறந்தயானு கேவலமான ஓர் மோசக்காரனுக்கு அஞ்சுவது? தாயே! வருந்தாதே, உனை யான் எவ்விதத்திலும் சிறைமீட்டு அழைத்துச் செல்

வேன். ஆனல் நீமாத்திரம் இதற்காக எனக்கோர் உதவிசெய்ய வேண்டும். அதாவது, யான் இவ்விடத்தைவிட்டுச்சென்றதும், நாளைய காலையில் மாயாபக்கிரி இங்குவந்தால், அவனுடன் நீ காதல் கொண்டவள்போல் அபிநயத்து அன்னவனின் உயிர் எவ்விடத்திலிருக்கின்றதெனதெரிந்துநாளுக்கு புஷ்பம் கொண்டுவரும் ஔவையாரிடம் லிகிதத்திலெழுதி, யாருக்கு மறியாமல் என்னிடம் சேர்க்கும்படியாகச்செய்தால், அதுவே எனக்குப் போதுமான உதவியாகும் என்று தெரிவித்துத் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு சென்ருன். மறுநாள் காலையில் மாயாபக்கிரி நாகம்மாளைப்பார்த்துவர அரண்மனைக்குள் வரும் சமயம் நாகம்மாள் அதிக சந்தோஷத்துடன் அமர்ந்திருக்கின்ருள். இதைக் கண்டதும் மாயாபக்கிரி அதிக சந்தோஷங்கொண்டு,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

ஏதடிபெண்மயிலே இத்தனைசந்தோஷங் கொண்டாய்
மாதரசியாளே என்ன மார்க்கமதை யுணர்ந்தாய்
அழுதகண்ணும் சிந்தையுமாய் அன்னம் புசியாமல்
பழுதுறவெனைச் சினந்து பாராமுகமாய் நீயிருப்பாய்
இன்றுதான் உன்மனது இளகினதோமாங்குயிலே
நன்றடி உன்மனதில் நல்விருப்பம் சொல்மயிலே
என்றமொழிகேட்டு இளங்கொடியாள்ஏதுசொல்வாள்
புன்னகைபுரிந்துமாய பக்கிரியைத் தான்கனிவாய்
உலகில் புகழ்படைத்த உத்தமரே பக்கிரியே
கலக்கமொன்றும் கொள்ளாதீர் காதல்கொண்டேன் இத்ததி
என் கணவரும் மாண்டாரே கட்டழகி யென்னைவிட்டு [யே
மனது சலித்ததினல் மர்மமாய் இருந்ததுண்டு
இன்னும் ஒருமாதம் இருக்குதையாநோன்பெனக்கு

என்விரதம் முடிந்தால் இணையுலகில் யார்நமக்கு
ஆனாலும் மன்னவரே அடியேன் மனதிலொன்று
தோணுவதனாலே தொந்தரைக் குள்ளானேனின்று
என்னடி மாதரசே என்மீது சந்தேகம்
ஒன்றுக்கும் அஞ்சாதே உரைப்பாயடி யிச்சமயம்
என்றமொழிகேட்டு இளங்கொடியாள் கூறுகிறாள்
நன்றையான் நானுரைப்பேன் நாட்டமுடன் கேட்டிடுவீர்

**வசனம்:**—தாங்கள் மந்திரதந்திரத்தில் வல்லவர் தான். தவிர, தாங்கள்செய்யும் தொழில் மிகவும் ஆபத்தான நிலையிலிருப்பதால் திடீரென என்னை விட்டு மடிந்து விடுவீரானால், அனாதையாகிய யான் ஏதுசெய்வேன். அதற்காகத்தான் என்மனது அஞ்சுகிறது என்றுசொல்ல, அதைக்கேட்ட பக்கிரி, கலகல என்று நகைத்து, அடிபைத்தியக்காரி! இதற்காகவா மனங் கலங்குகின்றாய். என்னை மடிப்பதென்றால் சாமான்யமாகுமா? என்னைத் துண்டுதுண்டாக வெட்டினபோதிலும் என் உயிர்போகுமா? அதாவது என்னைக் கொல்லவென்றால், ஏழுகடலுக் கப்பால் மண்கோட்டை யொன்றுண்டு அதற்கு நடுவில் ஏழுகினை விழைக்கப்பெற்ற நூதனக்கோட்டை யொன்றுண்டு. அக்கோட்டைக்குள் புகுந்துசென்றால் ஓர் கானகமுண்டு. அக்கானகத்தில், விளாமரங்களும், முருங்கமரங்களும், வேப்பமரங்களும் மற்றும் பலவிதமான மரங்களுமுண்டு. ஆனால் அதன் நடுவில் ஓர் முந்திரிச்செடி இருக்கின்றது, அச்செடியின் கோரையில் புகுந்து சென்றால், ஏழுமண்பானைகள் அடுக்கியிருக்கும், அப்பானைகளில் அடிப்புறத்திலிருக்கும் பானையினுள்ளே தங்கத்தாலிழைத்த ஓர் கிளிக் கூண்டு இருக்கும். அக்கூண்டில் ஓர் பஞ்சவர்ணக்

கிளி இருக்கின்றது. அதைக்கண்டுபிடித்து அக்கிளியை யார்கொல்லுகின்ருர்களோ, அப்பொழுது தான் எனதுயிர் நீங்கும், என்று கூற, நாகம்மாள் சந்தோஷித்து, புன்னகையுட னிருந்தாள், பக்கிரி பெண்ணே! இனியாகிலும் கள்ளங்கபடமற்றுச் சந்தோஷத்துடனிருவென்று கூறிச் சென்ருன். பக்கிரி சென்றதும் பக்கிரிசொன்ன சகலசங்கதிகளையும், ஓர் லிகிதத்திலெழுதி மடித்துவைத்துக்கொண்டு, புஷ்பங்கொண்டுவரும் கிழவியின் வருகையை எதிர் பார்த்திருந்தாள்

அந்நேர வேளையில் ஔவைக் கிழவிவாராள் தந்தானத்தான
வந்தகிழவியை வணங்கினுள் வார்குழலாள் ,,
கொண்டுவந்தமலர் தன்னையே கண்டாளே ,,
சந்தோஷமாய்க் கைதனில் கொண்டாளே ,,
நாளைவரும்போது நங்கையே பாட்டியரே ,,
இவ்·ஓலையிலுள்ளபடி கட்டிவருவாயே ,,
இந்த ஓலைதன்னை உன்றன் பேரனிடத்தே ,,
தந்து இதிலுள்ள புஷ்பந் தருவாயே ,,
பக்கிரி தன்னிடம் ஓலையைக் காட்டாதே ,,
முக்கியமாய்ப் பேரன் தன்னிடம் தருவாயே ,,
ஓலையை வாங்கியே பூக்காரியும் நடந்தாள் ,,
பாலனிடந்தன்னில் பாட்டியும் ஓடிவந்தாள் ,,
தம்பி இதிலுள்ள சங்கதி பாருமடா ,,
உண்மையுடனதில் உள்ளதைக் கூறுமடா ,,

வசனம்:—அப்பா! பேரா! நாளைக்கு வேண்டிய புஷ்பத்திற்காக நாகம்மாள் ஓர்லிகிதத்தில் குறித்துக் கொடுத்திருக்கின்ருள். இதிலுள்ளதுபோல்நாளைக்குக் கட்டிக்கொடு என்று சொல்ல, சரியெனப் பாலன் நகைத்து, பாட்டி நாளைய காலையில் நான் என் தந்தை

யின் விஷயமாகக் கிளிப்பட்டணத்திற்குப் போக வேண்டியதிருக்கின்றது. அங்கே எனக்குப் பங்குபாக முண்டு. அதை விற்பனைசெய்து திரவியத்தைக் கொண்டுவந்து விடுகிறேன், நம் கஷ்டத்திற்கு அப் பொருள் உதவும். நீமாத்திரம் கொஞ்சம் கட்டமுது கட்டிக்கொடு என்று சொல்லிக் கட்டமுது பெற்று அநேகதூரம் கானக மார்க்கமாக வந்து ஓர் குளத் தின் கரையோரத்தில் சாதமருந்தி சமுத்திரக்கரை யோரத்தில் வந்துநின்று, இச்சமுத்திரக் கரையை எப்படித் தாண்டுவது என யோசித்து நிற்கும் சமயம் அங்குள்ள ஓர் மரத்தில் குடியிருந்த கண்டபேரண்ட பக்ஷியின் குஞ்சுகளைச் சர்ப்பமானது கடிக்க மரத்தில் ஏறுவதைக்கண்ட பாலன் ஓடித் தன்கரத்திலிருந்த வாளினால் அதை இருதுண்டமாக்க அதன் சிரசானது பாலனின் கரத்தில் கடித்து மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான்.

மைந்தன்மூர்ச்சையாகிமண்மேல்விழுந்தானே நந்தானத்தான
வந்தவோர் காரியம் தன்னை மறந்தானே ,,
பானுகண்டிதனில் வைத்த புஷ்பச்செடியும் ,,
தானாகவாடியே தரையில் விழுந்ததும் ,,
செடியும் வதங்கிய செய்தியைக் கேட்டாளே ,,
மடிந்தான் மகனென மனது தளர்ந்தாளே ,,
பாலன் மடிந்ததைப் பார்த்தது குஞ்சுகளும் ,,
ஆலகாலத்தினால் ஆபத்து நேர்ந்ததுவும் ,,
ஆபத்தைத் தீர்க்க அரவத்தை வெட்டியதும் ,,
கோபத்துடன்சர்ப்பம் கொடுமையாய்த் தீண்டியதும் ,,
தாய்தந்தை வந்ததும் தானேயுரைத்ததுவே ,,
சேயனிடகுறை தீர்த்திடு மென்றதுவே ,,
அவனை எழுப்பாமல் அமுது புசிப்பதில்லை ,,
எனவே குஞ்சுகள் இனிதுடன் கொஞ்சவில்லை ,,

வசனம்:—இதைக்கண்ட தாய்தந்தையான அப் பக்ஷிகள் அச்சிறுவனை எழுப்பி, அவனது விர்த்தாந் தங்களை யுணர்ந்து ஆண் பக்ஷியானது அவனைத் தன் முதுகின்மேலேற்றி:

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

சிறகைத்தட்டி யெழுந்து ஜில்லென்று பறந்ததுபார்
தட்டிக்கெட்டு வருகுதுபார் சப்தசாகரந்தாண்டிக்
கடலேழும்தாண்டியங்கு கண்டதுபார்மண்கோட்டை
திடமாக உள்போகத் தெரியுது கிளிபாட்டை
தோப்பு வழியாகத் துள்ளிப்பறந்ததுபார்
வேப்பமரமுடனே விளாமரமும் கண்டதுபார்
பனைமரச்சோலைதனாய் பக்கத்திலே மணல்மேடை
மணல்மேடையினருகே முந்திரிச்செடியுமுண்டு
முந்திரிச் செடியருகே மைந்தனை விட்டதுவே
சுந்தர பாலகனும் செடியினருகில் நின்று
வெட்டினனச்செடியை வீரமணிவாளாலே
பொட்டெனமரம்விழவே பானைகள் தெரியுதுபார்

வசனம்:—இதைக்கண்ட பக்ஷிகள் பானையினுள் ளிருக்கும் தேன்குளவிகள் கடித்தால் பாலன் மடிந்து விடுவான். நாம் இதுவரையில் பட்டகஷ்டங்களெல் லாம் வீணாகுமென்று பாலனை ஓர் புறத்தில் ஒளித்து வைத்து, தன்னுடைய சிறகினால் மேலுள்ள ஆறு பானைகளையும் கீழே உருட்டித்தள்ளி உபாயத்தில் கிளம்பிவிடவும், அதிலுள்ள கதண்டு, குளவிகட் பறந்துமூலைக்கொன்றாக ஓடிப்போய்விட்டன, உடனே பக்ஷிகள் பாலனைச் சைகைசெய்யப் பாலன் ஏழாவது குடத்திலிருக்கும் கிளிகூண்டை எடுத்து, அதிலுள்ள பஞ்சவர்ணக்கிளியைத் தன்கரத்தில் பிடித்துக் கொண்டு அப்பக்ஷிகள்மீது அமர்ந்து பழையபடி முன்

மூர்ச்சையான சமுத்திரக்கரையில் வந்துசேர்ந்து பக்ஷிகளுக்கு நமஸ்காரம் செய்து, நீங்கள் செய்த நன்றியை என்கால முள்ளளவும் மறவேன் என்று சொல்லிப் பக்ஷிகளிடம் விடைபெற்று,

கிளியைகையில்கொண்டுகீர்த்தியாய்வாராரானேதந்தானத்தான
வழியிலே செக்கொன்று ஓடிடக்கண்டானே ,,
வணிகசங்கு அவள் செக்கதை ஓட்டுகிறுள் ,,
பணிவுடனே பாலன் பாவைமுன்வந்துநின்றே ,,
சாதங்கொஞ்சம் தாரும் செக்கை ஓட்டுகிறேன் ,,
நீதமுடன் சொல்ல மாதவள் சம்மதித்தாள் ,,
செக்கில் பூட்டினாரிங் சிறுவனமைந்தானே ,
பக்குவமாய் மாட்டைத் தட்டி ஓட்டினானே ,,
வேகமாகச் செக்கு கிறுகிறெனச்சுழல ,,
சோகங்கொண்டுமாயா பக்கிரியும் சுழல ,,
மயக்கமாய்ப் பக்கிரி மண்ணில் விழுந்தானே ,,
தியங்கி ஓடிவந்து சிறுவனைக் கண்டானே ,,
சிறுவனிடத்தினில் கிளிதனைக் கண்டானே ,,
கர்வ மடங்கியே கதறியழுதானே ,,
பாலனே என்றனைப் பரிகாசம் செய்யாதே ,,
கோலமான என்றன் கிளியைததா இப்போதே ,,
பணிந்துவணங்கியேபாலனைப போற்றிசெய்தான் ,,
கனிந்தவன்போல் மமந்தன் கபடமாய் எதுசொல்லி ,,

நல்லதங்காள்கதை அம்மானை மெட்டு

என்—தாயைச் சிறையெடுத்த சண்டாளப்படுபாவி
உன்—மாயவித்தை மர்மமெல்லாம் மடிந்ததடாகூவி
நீ—தின்ற உப்புமாண்டதடா சாகக்காலம் வந்ததடா
இன்று நீ உன்திறத்தை என்னிடத்தில் காட்டுமடா
எமனும் எதிரில்வந்து இங்கேவா என்றழைக்கத்

தாமதிக்காமல்போடா தரணியோருனைநகைக்க
ஊரைக்கெடுத்தவனே ஊதாரியானவனே
பேரைக்கெடுத்துக் கொள்ள-என்-மாதாவைக்கவர்ந்தவனே
பாலனுரைத்தமொழி பக்கிரியும் கேட்டானே
காலனாய் வந்தசிறு பாலனைப்பணிந்தானே

வசனம்:—பக்கிரி பாலனைப்பணிந்து, அப்பா! மைந்தனே! யான் உன் அன்னையை இனித் தப்பிதமாக நினைக்கவில்லை என் பிழைகளை மன்னித்து என் கிளியைக் கொடுத்துவிடு என்று வணங்க சிறுவன், மனது இளகியவன்போல், நான் கேட்கும் பொருள்களை யெல்லாம் எனக்குக் கொடுப்பாயானால் உன்கிளியைத் தருகிறேன். அதாவது:

நல்லதங்காள் கதை அம்மானை மெட்டு

இறந்தவரை எழுப்பும் எழுகோடி மந்திரங்கள்
சிறந்த மந்திரப்பிரம்பும் ஜெகத்தைமயக்கும் மையும்
பேய்பூத ராக்ஷதரும் பிரியா வசியங்களும்
மாய்கையுற மயக்கும் மந்திர விபூதியதும்
லட்டியும் அஞ்சனமும் ராஜவசியங்களும்
கேட்டதைத் தந்துதவும் கீர்த்தியுள்ள ஜோளியையும்
நீ—கற்ற மந்திரமெல்லாம் கபடமின்றியே யுரையும்
மற்றதை யப்புறம்யான் மொழிவேன் தெரிந்துகொள்ளும்
என்ற மொழிகேட்டு இடிவிழுந்தான் பக்கிரியும்
நன்றல்ல பாலகனே நீ கேட்டதிதுவனைத்தும்
மந்திரத்தைக் கேட்காதே மாயக்கிளி தந்திடுவாய்
உன்தனிட தாய்தனையே உத்தமனே அழைத்துச்செல்வாய்
அழுத்தினன் கிளிதனையே அவனுடல் நடுக்கமுறத்
தொடுத்திடுவேன்மந்திரத்தைக் கொல்லாதே என்னுயிரை
இந்தாரும் பாலாஎன்று எடுத்துக்கையில் தந்தானே

மந்திர தந்திரமும் மர்மமெல்லாம் சொன்னனே
மறந்தேன்யான்மற்றுமொன்று மொழிவேனதையுன்றனுக்குச்
சிறந்த என் தந்தையர்கள் செல்வர்கள் ஏழுபேரை
எழுப்பிநீ தாருமடா இழிவான துன்மார்க்கா
வழுத்திய மொழிகேட்டு உயிர்பெறச் செய்தானே

வசனம்:—பக்கிரியானவன் தன்னிடமிருக்கும் மந்திரங்களை யெல்லாம் கொடுத்து முடிவில், பாலனுடைய தந்தையர்களாகிய ஏழுபேர்களையும் அவர்களுடன் யானை சேனை பரிவாரங்களையும் மந்திர சக்தியினல் எழுப்பினன், உடனே உயிர்பெற்றெழுந்த மன்னர்கள்,

காலருத்திரனைப்போல் சீறியெழுந்திருந்தார் தந்தானததான
ஆலாகோலப்பட அவனை முறியடித்தார் ,,
பாலனிதைக்கண்டு பதைத்தவன் ஓடிவந்தான் ,,
சீலமாய்த்தாய்தந்தையர் கோபந்தனைதணித்தான் ,,
சிறைப்பட்டப்பெண்களைச் சிறுவன்வெளியில்விட்டான் ,,
உரமுடனே ஓடித்தாயை யழைத்து வந்தான் ,,
அடிமை பட்டபேரை விடுதலை செய்தானே ,,
கொடுமை யனைத்தையும் கடுக ஒழித்தானே ,,
பல்லக்கின் மீதினில் அன்னையை அமரச்செய்தான் ,,
வல்லவன் பக்கிரியை வாவென்றருகழைத்தான் ,,

வசனம்:—பாலன் தன் தாயாகிய பாலநாகம்மாளை ஓர் பல்லக்கிலேற்றி பக்கிரி முன்புறமும், அவன் மனைவியாகிய வணிகசங்கு பின்புறமும் தூக்கிக் கொள்ளச் செய்து, நயன பட்டணத்தைத் தாண்டி, கிளிப்பட்டணத்தை யடைந்து, சூர்யவர்த்தி வேந்தனைக் கண்டு அவன் புதல்வியை விவாகம் செய்து, பிறகு கங்காவதி பட்டணமடைந்து அவ்

வேந்தனின் மகளையும் மணந்து அங்கிருந்து பாலன் தன் பரிவாரங்களுடன் புலிவேந்தன் பட்டணத்தை யடைந்து அவன் புதல்வியையும் மணமுடித்து அங்கிருந்து நல்ல சுப தினத்தில் மூன்று மனைவிமார் களும், தன் தாய், தந்தையர்கள் எழுவர்களும் புறப் பட்டு,

யானைசேனை பரி வாரங்கள் தன்னுடனே தந்தானத்தான
ஆனந்தமாகவே கானவழிநடந்தார் ,,
முன்னாலே வீர முரசு முழங்கிவர ,,
பின்னாலே பக்கிரி பல்லக்கைத் தூக்கிவர ,,
பாலன் மனைவியார் பல்லக்கிலேறிவாரார் ,,
கோலகோலமன்னர் குதிரைமேல் பின்னால்வாரார் ,
பானுகண்டிநகர் பார்மன்னர் வந்தடைந்தார் ,,
தோணவேமுன்னமோர் தூதுஅனுப்பிவைத்தார் ,,
ஆலாத்தி ஏந்தியே அன்னையர் ஆறுபேரும் ,,
பாலனுக்கு மாறு மன்னர்க்கும் சுற்றஉற்றார் ,,
அன்னையறுவரும் அரும்பாலனை யணைத்து ,,
வென்றுவந்தாயோ மகனேயென்றார்ப்பரித்து ,,
போனமுதற்கொண்டு ஆசை சங்கதிமுற்றும் ,,
காணஉரைத்திட கன்னியர்கள் மகிழ்ந்து ,,

வசனம்:—பிறகு ஓர் அக்கினி வளர்த்தி அதில் நாகம்மாளை விழுந்தெழச்செய்து சுகக்ஷேமத்துடன் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இப்படி இருக்க, பால வர்த்திவேந்தன் பக்கிரியின் பொருள்களனைத்தும் வாங்கி ஏழைகளுக்கு தர்மம்செய்து. அவனது கோட்டை முதலியவற்றை இடித்து நாசஞ்செய்ய, ஓர்நாள் பக்கிரி துணிந்து பாலன் கரத்திலிருக்கும் கிளியைப் பிடுங்கத் துராக்ரதமாய்ப் பிரவேசிக்க, உடனே அக்கிளியை கழுத்தை முறித்து எறியவும், பக்கிரி மடியலானன்.

O-INT-C B
X/59



நல்லதங்காள் கதை அம்மானை மெட்டு

பஞ்சவர்ணக்கிளிமடியப் பக்கிரி மடிந்தானே
அஞ்சாத துன்மார்க்கன் அரன்பாதம்சேர்ந்தானே
மடிந்ததோர்பக்கிரியைமைந்தன் அடக்கஞ்செய்தான்
கடிந்த மனங்கனிந்து காரியம் பலமுடித்தான்
நாகள்ள பூடியிலே நல்லசமாதி வைத்தான்
ஏகமாய்ப் பக்கிரிகள் இசைந்து பாத்யா ஓதலுற்ருன்
பேரும் மறைந்தது பிரபல்யம் போச்சுது
யாரும் புகழ்ந்திடவே அறைந்திடவுமாச்சுது
நாகம்மாள் கதையதனை நாட்டில்படித்தோரும்
ஏகமாய்க் கேட்போரும் இசைந்து வாழ்வார்பாரும்
இந்தக் கதைதன்னை இணைத்த தியாகராஜன் வாழி
சொந்த அச்சிலிட்ட தேவராஜி தான்வாழி
கற்றவரும் வாழி கவிப்புலவர் தான்வாழி
விற்பனமாய் ஆட்சிசெய்யும் வேந்தரும் மிகவாழி
கவியோத கற்றுதந்த கபடமற்ற குருவாழி
புவிதனிலே தானதர்மம் புரிந்தோர் குணம்வாழி
ஆழிசூழுலகினிலே அருந்தமிழுரைத்திடவே
வாழிவாழி யென்றெனக்கு வரமளித்தான் வேல்முரு
முருகன் அருளோங்க முப்பிறப்பின் வினைநீங்க [கன்
தருமம் செழித்தோங்கத் தரணியோர் வாழ்ந்திடவே

பதிவிரதா பூஷணமென்னும்
பாலநாகம்மாள் கதை
முற்றிற்று.

TAMIL ... UNIVERSITY
112167

வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1. (1958)

## முத்தத்தின் மர்மம்

விலை ரூ. 1-50

இதில் மங்கையரை அழகு பெற முத்தமிடும் நூற்றுக் கணக்கான வகைகளும், முத்தத்தின் வரலாறும், அதன் சிறப்பும், சாஸ்திர முறைப்படி முத்தமிட வேண்டிய முறைகளும், காதலர்களின் முத்தத்தின் தன்மையும், தபால், தந்தி, டெலிபோன் மூலமாய் முத்தமிடுவதெப்படி என்னும் விபரங்களும், முத்தத்தினுல் வரும் அதிர்ஷ்டமும், துரதிர்ஷ்டமும், பள்ளியறையின் முத்த இரகசிய முறைகளும் அடங்கி இருக்கின்றன.

## அனுபவ சாமுத்ரீகா லக்ஷண சாஸ்திரம்

விலை ரூ. ந. பை. 0-75

நீங்கள் ஒருவரை பார்த்த மாத்திரத்தில் அவரது குணுனு பவங்களை தெரிந்துகொள்ள விருப்பமுள்ள வர்கள் அந் நூலில் ஒன்றை வாங்கி வாசித்தால் இதில் மனிதனுடைய பஞ்சேந்திரியங்களினுடைய லக்ஷணங்கள் எல்லாவற்றிற்கும் பலன் தெரிவிக்கும். இதைப் படித்தபின்னர் நீங்களே இன்னர் இன்ன லக்ஷண முடையவரென்று தெரிந்துகொள்ளலாம்.

## அனுபோக வைத்திய குணபோதினி

விலை ரூ. 1-00

(நேடிவ் டாக்டர் வாசுதேவன்)

இந்நூலில் சரக்கு சுத்தி வகைகள், புடம் போடும் வகைகள், சூரண வகைகள், செந்தூர வகைகள், பற்ப வகைகள், மாத்திர வகைகள், எண்ணே வகை கள், லேகிய வகைகள், குழந்தை ஒஷதங்கள் முதலிய மருந்து முறைகளை விபரமாகக் கூறப் பட்டுள்ளது வைத்தியர்கட்குத் தேவையான சகல விஷயங்களும் ஒருங்கே யமைந்துள்ளபடியால் வைத்தி யர்கட்கும் ஏனேயோருக்கும் இன்றியமையாததாகும்.

கிடைக்குமிடம்:— ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெகட்ராமய்யர் தெரு; சென்னை-1.

# ஸ்திரீ புருஷ லக்ஷண சாஸ்திரம்

விலை ரூ 1-00

நீங்கள் ஒருவரை பார்த்த மாத்திரத்தில் அவரின் குணங்களை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அவரின் நடையால் இவர் இத்தகையர் என்று தெரிய விரும்புகிறீர்களா? அவரின் குரலால் இவர் குணம் இம்மாதிரியது என்று உரைக்க விரும்புகிறீர்களா? அப்படியாயின் இன்றே இந்நூலை வாங்குங்கள்! இது உங்களுக்கு மேற்கண்ட யாவற்றையும் விளக்கும் லக்ஷண சாஸ்திரம்.

### மானிட மர்ம சாஸ்திரம் எனும்

# சரீர மர்ம சாஸ்திரம்

விலை ரூ. 2-50

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், ரதி மன்மதன் சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம் சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியனவும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும்; மகாரிஷிகள் எழுதிய, இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும், இனிமேல் விவாகம் செய்து கொள்பவர்களுக்கும் இன்றியமையாத நூல். படங்களுடன் கூடியது.

கிடைக்குமிடம்:—

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெகட்ராமய்யர் தெரு, சென்னை-1.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

"ஆனந்த விகடன்" ஆசிரியர்

எஸ். எஸ். வாஸன் அவர்கள்

இயற்றியது.

விலை ரூபாய் 3 - 50.

இந்நூல் குடும்பஸ்தர் ஒவ்வொருவர்க்கும் அவசியம் வேண்டுவதாதலால், அறிந்தோர் இந்நூலைத் தம் பந்து மித்திரர்களுக்கு வாங்கிக் கொடுக்கின்றனர். சிலர் கலியாணங்களில் தம்பதிகளுக்கு இந்நூலில் ஒன்றைப் பரிசளிக்கின்றனர்.

வாழ்க்கையின் இரகசியங்களை அறியாதவருக்கு இல்லறத்தில் இன்பம் இல்லை என்பது நிச்சயம். இப்புத்தகம் கலியாணமானவருக்கும், இனி கலியாணம் செய்துகொள்பவருக்கும் மிகவும் அவசியமானதாகும். இதன் ஒவ்வோர் அத்தியாயமும் குடும்ப வாழ்க்கையின் குணநலனை புகட்டும்.

கிடைக்குமிடம்:

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

4, வெங்கட்ராமய்யர்தெரு,

சென்னை-1.

# திரிகால இரேகை சாஸ்திரம்

விலை ரூபாய் 1.

[சக்திதாஸன் எழுதியது.]

விளக்கமான அநேகப் படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரியசித்தி, சௌக்கியம், இல்லறசுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துக்கொள்ளலாம்.

தமிழ்ப் புத்தகங்கள் அடங்கிய விலை விபர ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தை தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம் :—

ஆர். ஜி. பதி கம்பெனி,

4, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை-1.

# கைத்தொழில் முறைகள்

**விலை ரூபாய் 2-00.**

1000-இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னீஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இது போன்ற 1000-எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்க வேண்டும். 288-பக்கங்கள் கொண்டது.

# சொர்ப்பன சாஸ்திரம்

**விலை ரூபாய் 1-50.**

சொர்ப்பனங்களின் பலா பலன்களை அறிய இனி நீங்கள் எவரையும் தேடிச்செல்ல வேண்டியதில்லை. இந்த நூல் ஓர் அகராதி போல் 'அ'விலிருந்து ஆரம்பிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. சாதாரணக் கல்வியறிவுள்ளவர்களும் சிறிதும் கஷ்டமின்றி எவ்விதச் சொர்ப்பனத்துக்கும் பலன் தெரிந்து கொள்ளுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் புத்தகங்கள் முற்றும் அடங்கிய விலை விபர ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

4, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.